www.tamilarangam.net



# களத்தில்

*சீற்றங்கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக் குரலை சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும் அசட்டை செய்ய முடியாது.*

– தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (27.08. 1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (142) அன்பளிப்பு: 60 p


# தாங்கி அணியை தகர்த்து கடும் சண்டை



எல்லையில் இவளின் துப்பாக்கி எழுந்து நிற்கிறது
இவர்களின் இதயங்களில் இலட்சிய தாகம் எழுந்து நிற்கிறது

- 73 மி.மி. பீரங்கி
- எறிகணைகள், கவச வாகனம், வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டது
- 50 கு மேற்பட்ட படையினர் பலி
- 7 போராளிகள் வீரச்சாவு

தரைப்பாதை அமைப்பு முயற்சி எனும் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ள ஜெயசிக்குறுய் இராணுவத்தினருக்கு 19-8-97 அன்று மீண்டும் ஓர் அதிர்ச்சித் தாக்குதல் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்டது. அதிகாலை நேரம் தனது களமுனையை பழையவாடிப் பகுதியில் இருந்து திறந்த சிங்களப் படை, புளியங்குளம் நோக்கி முன்னேற முயன்றது. இதன்போது படையினரின் முன்னணிப் பிரிவு, புலிவீரர்களால் நேரடியாகத் தாக்கப்பட்டது. தொடர்ந்து ஏற்பட்ட உக்கிர மோதலில் படையினரின் 2 டாங்கிகள் முற்றாக அழிக்கப்பட்டன. மேலும் இரண்டு கடுமையாகச் சேதப்படுத்தப்பட்டன.

அத்துடன், 73 மீ.மீ. பீரங்கி

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## இராணுவ இலக்குகள் மீது எறிகணை வீச்சு

மட்டக்களப்பில் இராணுவ இலக்குகள் மீது பாரிய 'ஆட்டிலறி' தாக்குதல்கள் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்டுள்ளன. கடந்த 25ஆம், 26ஆம் திகதிகளில் நடந்த இத் தாக்குதல்களில் இராணுவத்தினரின் பிரதான முகாம்கள், புளட் குழுவின் முகாம், இராணுவ-பொலிஸ் கூட்டுநிலைகள் மீதே குறிவைக்கப்பட்டன. சிங்கள இராணுவத்தின் 3வது படையணித் தலைமையகம், பிரிகேடியர் அலுவலகம், கல்லடி இராணுவ முகாம் மற்றும் பட்டிருப்பு பொலிஸ் நிலையமுமே தாக்குதல் இலக்குகள் ஆயின. இது பற்றிய தலைமைப்பீடச் செய்திகள் கிடைக்கப் பெறவில்லை. சுமார் ஆறு மைல் தொலைவில் இருந்து இலக்குத் தவறாமல் நடாத்தப்பட்ட இத் தாக்குதல் குறித்து சிங்களப் படைத்தரப்பு மிகுந்த கலக்கமடைந்துள்ளது. இத் தாக்குதல்களில் கணிசமான இழப்பு ஏற்பட்டிருப்பதாக செய்தி தெரிவிக்கும் கொழும்பிலுள்ள சர்வதேச செய்தித் தாபனங்கள், அவற்றின் சரியான எண்ணிக்கையை சிறிலங்கா அரசு வெளியிடவில்லை எனத் தெரிவித்துள்ளன. தாக்குதல் நடந்ததை சிறிலங்கா இராணுவத் தலைமையகம் ஒத்துக் கொண்டுள்ளது. ✷

## பாலியல் துன்புறுத்தல் போராயுதமாக கையாளப்படுகின்றது.

- ஐ.நா. மனித உரிமை உப ஆணைக் குழுவிடம் முறையீடு

"தமிழ் மக்களின் சுய மதிப்பை அழிக்கவேண்டும் எனும் நோக்கோடு, தமிழ்ப் பெண்கள் பாலியல் வல்லுறவுகளிற்கும் சித்திரவதைகளிற்கும் சிறீலங்காவின் ஆயுதப் படைகளினால் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். கடந்த வைகாசி 17ம் நாள், மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்தில் கடமை புரியும் 20 பொலிசாரைக் கொண்ட கும்பலினால் 35 வயதான தமிழ்த்தாய் ஒருவர் அவரது மூன்று பிள்ளைகளிற்கு முன்னால் கூட்டான பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டு, அதன் பின்னர், அவரின் பாலியல் உறுப்பில் கைக்குண்டை வீசிப் படுகொலை செய்து மருத்துவ சான்றுகள் பெறமுடியாது ஆக்கப்பட்ட கொடுமையான சம்பவம் இடம் பெற்றுள்ளது. சிறிலங்கா, தமிழ்த் தாய்மார் – மாணவிகள் – இளம் பெண்கள் மீது நடாத்தும் காட்டுமிராண்டித்தனத்திற்கு இது ஒரு சிறு உதாரணமாகும். சீன மனித உரிமை அமைப்புக்கள் பல சுட்டிக்காட்டியுள்ள தகவல்களின்படி, 1996ம் ஆண்டில் மட்டும் 150 தமிழ்ப் பெண்கள் சிங்களப் படையினரால் பாலியல் வல்லுறவுகளுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். சிறிலங்கா ஆயுதப் படைகளினால் நடாத்தப்படும் இத்தகைய குரூரமான செயற்பாடுகள், சிறிலங்கா

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

## இலக்குத் தீர்மானிக்கப்பட்டே குண்டுகள் வீசப்படுகின்றன

- தேவாலய படுகொலை குறித்து கத்தோலிக்க குரு

"தற்செயல் அல்ல. திட்டமிட்டே பொதுமக்கள் தாக்கப்படுகின்றனர். மக்களுக்கு அதிக இழப்பை ஏற்படுத்தும் நோக்கில் இலக்கு தனியக்க உளவு விமானத்தால் தீர்மானிக்கப்பட்டே குண்டுகள் வீசப்படுகின்றன." இவ்வாறு வவுனிக்குளத்தில் கத்தோலிக்க தேவாலயத்தில் அகதிகள் தஞ்சமடைந்திருந்தவேளை அதன் வளவின் மீது சிறிலங்கா வான்படை குண்டு வீசி ஒன்பது பொதுமக்கள்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறிலங்கா ஜனாபதி தலைமையில் ஆயுதக் கப்பல் குறித்து ஆராய்வு

சிம்பாவேயில் இருந்து ஆயுதங்களை ஏற்றி வந்த கப்பல் காணாமல் போனது குறித்து, கிடைத்த புதிய தகவல் ஒன்றின் அடிப்படையில் அது குறித்து ஆராய்வதற்காக, தனது படைத் தலைமைகளை சிறிலங்கா ஜனாதிபதி கூட்டியதாகத் தெரிகிறது. சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா தலைமை வகித்த இக் கூட்டத்தில், சிறிலங்கா விமானப் படைத் தளபதி ஒலிவர் ரணசிங்க, கடற்படை தளபதி சிசில் திசேரா, இராணுவத் தளபதி ரோகான் தலுவத்தை உட்பட சிறிலங்காவின் படைத்தரப்பு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டுள்ளனர்.

சிம்பாவே பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த கேணல் டுபூ, கடந்த வாரம் கொழும்பு வந்து சிறிலங்கா இராணுவத் தளபதி ரோகான் தலுவத்தையிடம், சிம்பாவேயில் இருந்து ஆயுதங்களை ஏற்றி வந்த 'ஸ்ரில்லஸ் லிம்மிகல் விக்டோரியா' என்ற கப்பல் முல்லைத்தீவுக்குத் தெற்கே சர்வதேசக் கடல் எல்லையில் வைத்து விடுதலைப் புலிகளால் மறிக்கப்பட்டு, ஆயுதங்கள் அனைத்தும் இறக்கப்பட்டு விட்டதாக தமக்கு நம்பகத் தகவல் கிடைத்துள்ளதென உத்தியோகபூர்வமாக தெரிவித்ததாகவும், அதையடுத்தே இந்த அவசர படைத்தரப்பு உயர் மட்டச் சபைக் கூட்டம் நடாத்தப்பட்டதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக் கப்பல் விவகாரம் குறித்து சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர், இந்த ஆயுதக் கப்பலை தமிழீழ விடுதலைப் புலிகள் கடத்தி இருப்பார்கள் என தாங்கள் நினைக்கவில்லை எனவும், ஏதாவது ஆயுதத் தயாரிப்பு போட்டி நிறுவனமே கடத்தியிருக்கக்கூடும் எனவும் தெரிவித்துள்ளார். ஆயினும், இந்த மோட்டார் பீரங்கிக் குண்டுகளை விடுதலைப் புலிகள் இறக்கிவிட்டார்கள் என்பது உண்மையாக இருந்தால் அது சிறிலங்காப் படையினரை பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க வைக்கும்" எனவும் அவர் எதிர்வு கூறியுள்ளார் எனத் தெரியவருகிறது.

## சந்திரிகாவுக்கு முறையிட்ட குரு தேசத் துரோகியாகப் பிரகடனம்

சிறிலங்கா அரசபடைகளின் நடவடிக்கைகளை விமர்சித்து சிறிலங்காப் படைகளின் தலைவி சந்திரிகாவுக்கு கடிதம் எழுதிய குருவை, இவர் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தானவர், புரட்சிக் குரு என்றெல்லாம் இராணுவம் பிரகடனப்படுத்தியதால் அவர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

இவர், யாழ். குடாநாட்டில் இருந்த நாட்களில் அங்கு நாளாந்தம் நடந்த அனர்த்தங்களை விளக்கி சிறிலங்கா ஜனாதிபதிக்கு அவரின் பாதுகாப்புப் படைகளை விமர்சித்து கடிதம் எழுதியதே இவர் செய்த குற்றம்.

இதனால் நாட்டைவிட்டு வெளியேறிய எட்வின் அடிகள், தற்பொழுது வெளிநாடொன்றில் தங்கியிருந்து 1995 'ரிவிரெச' இராணுவ நடவடிக்கை காலம் முதல் குடாநாட்டில் நிகழ்ந்த அனர்த்தங்களை கிரமமாகக் குறிக்கும் போர் நாட்குறிப்பொன்றை தயாரித்து வருகிறார். ✷

## 14,000 பிள்ளைகள் கல்வி இழப்பு

யாழ். குடாநாட்டில் நிலவும் இராணுவப் பயங்கரவாதத்திற்கு அஞ்சி 2ஆம் – 6ஆம் வகுப்புகளுக்கு இடைப்பட்ட 14,000 பிள்ளைகளைத் தாய் தந்தையர் பாடசாலைக்கே விடாது வைத்துள்ளனர் எனப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் இவர்கள், பள்ளிக்கூடத்திற்கு சென்றாலும் அங்கு இக் குழந்தைகள் கல்வி பெறுவதற்கு உரிய வசதிகள் இல்லை எனவும், எனவே தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதும் ஒன்றுதான் – வீட்டில் பாதுகாப்பாக வைத்திருப்பதும் ஒன்றுதான் என

பெற்றோர்கள் பலர் தெரிவித்துள்ளனர். ✷

## சிறிலங்காவைக் கண்டித்து ஐ.நா. உபகுழுவில் அறிக்கைகள்

சிறிலங்காவின் மனித உரிமை வன்முறைகளையும், தமிழ் இன அழிப்பு நடவடிக்கைகளையும் கண்டித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உப ஆணைக்குழுவில் மூன்று சர்வதேச அமைப்புக்கள் அறிக்கை வாசித்துள்ளன.

நோர்த் சவுத், சர்வதேசக் கல்வி அபிவிருத்தி அமைப்பு, பக்ஸ் ரோமன் ஆகிய மூன்று சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களாலும் சிறிலங்காவைக் கண்டித்து அறிக்கை வாசிக்கப்பட்டதுடன் தமிழ் மக்களுக்கு ஆதரவான தீர்மானங்களும் முன்வைக்கப்பட்டன.

மேலும், பிரான்சிய, நோர்வேஜிய சட்ட நிபுணர்கள் இருவர் சிறிலங்கா அரசு மீதான தமது கண்டனத்தை வெளியிட்டனர். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க, சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென பிரான்சிய சட்ட வல்லுனர் வலியுறுத்தினார். இன்று நடக்கும் போருக்கு கடந்த காலங்களில் தோட்டத் தொழிலார் மீது நடாத்தப்பட்ட அநீதியான சம்பவங்களும் ஒரு காரணமென நோர்வேஜியன் சட்டத்தரணி எடுத்து விளக்கினார். ✷

## மக்கள் மீதான முற்றுகையில் 300 இளவயதினர் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தில் காரைதீவு மங்கைக்காடு பகுதிக்கும் நிந்தாவூருக்கும் இடைப்பட்ட இரண்டு மைல் நீளப் பகுதியை சிறிலங்காப் படையினர் 7 மணி நேரமாக சுற்றிவளைத்து மக்கள் மீதான முற்றுகையில் இறங்கினர். இந்த பாரிய, மக்கள் மீதான முற்றுகையில் 300 இளவயதினர் சிறிலங்காப் படையினரால் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். ஒரு வாரத்துக்கு மேலாகியும் இவர்களுக்கு என்ன ஆயிற்று என்ற விபரத்தை வெளியிட சிங்களப் படையினர் மறுத்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கிடையில், பளை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் முன்னர் வாழ்ந்து பின்னர் திருமலையில் வசித்து வந்த 18 இளைஞர்

களை சிங்களப் பொலிசார் கைது செய்து கொண்டு சென்றுள்ளளனர். இவர்கள் நிலையும் என்னவாயிற்று என்பது பற்றி அவர்களின் உறவினர்களால் அறியமுடியவில்லை.

## சிங்கள இராணுவ வைத்தியரின் கீழ்த்தரம் 26 வயது தமிழ் இளைஞன் மரணம்

பெரியதம்பி குகதாசன் எனும் 26வயது தமிழ் இளைஞன், நெடுங்கேணிப் பகுதியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினால் விசாரணை எனும் பெயரில் அழைத்துச் செல்லப்பட்டார். இராணுவத்தினரின் சித்திரவதை காரணமாக காயமுற்ற இவர், வவுனியா இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

ஜெயசுக்குறுய் இராணுவ நடவடிக்கையினால் காயமடைந்த இராணுவத்தினரிற்காக, இவரிடம் இருந்து பலவந்தமாக பெருமளவு இரத்தத்தை சிங்கள வைத்தியர்கள் எடுத்துள்ளனர். சிங்கள இராணுவ வைத்தியர்களின் அரக்கத்தனத்தால், நோய்வாய்ப்பட்ட இவ் அப்பாவித் தமிழ் இளைஞன் சிறையிலேயே இறந்து போயுள்ளார்.

சிங்கள வைத்தியர்களின் இனவெறித்தனமானதும் சர்வதேச வைத்திய விதிகளிற்கு முரணானதுமான இச்செயற்பாடு குறித்து, தமிழ் மக்கள் பேரதிர்சியும் ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளனர். ✷

## தமிழ்க் குழுவினால் ஒரு குடும்பம் கடத்தப்பட்டது

வன்னிப் பகுதியிலிருந்து மிருசுவில் பகுதியில் உள்ள தமது வீட்டிற்கு மீளவும் குடியமரச் சென்ற ஒரு குடும்பத்தை தமிழ்க் குழுவொன்று கடத்திச் சென்றுள்ளது.

திரு. கந்தசாமி என்பவரும் அவரது மனைவியும் 18 வயது மகனும் 16 வயது மகளுமே சிங்கள கூலிப்படைகளினால் கொண்டு செல்லப்பட்டவர்களாவர். இவர்கள் காணாமல் போனது குறித்த புகார்களை ஏற்க சிங்கள இராணுவம் மறுத்து வருவதாகத் தெரிகின்றது. ✷

## பொலநறுவை - மட்டக்களப்பு வீதியில் அதிரடித் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 20–08–97 அன்று விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் எழு சிங்களப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். பொலநறுவை – மட்டக்களப்பு வீதியில் மொற வகந்தை எனும் பகுதியில் வீதியால் வந்து கொண்டிருந்த படையினரே தாக்குதலுக்கு உள்ளாகினர். இதன்போது ஏழு படையினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட 4 படையினரின் சடலங்களும் பல ஆயுதங்கள், இராணுவ உபகரணங்கள் என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வித இழப்புக்களும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ✷

## இருபாலையில் 4 தமிழ்மக்கள் கைது

கடந்த 4ம் திகதி இருபாலையில் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் எனக் குற்றஞ்சாட்டி, ஒரு பெண் உட்பட நான்கு தமிழ் மக்களை சிங்களப்படை கைதுசெய்துள்ளது. இருபாலை சென்.ஜேம்ஸ் வீதியைச் சேர்ந்த திருமதி. யசிந்தா ஆரோக்கியநாதர், பூபதி றஜனிக்காந்தன், கந்தசாமி கருணாகரன் சங்கானை மற்றும் இளவாலையைச் சேர்ந்த கிறிஸ்ணன் தவபாலன் ஆகிய பொதுமக்களே மேற்படி இருபாலைக் குண்டு வெடிப்புடன் தொடர்பு பட்டவர்கள் என சிங்களப் படையால் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். ✷

## ரத்வத்தையின் மெய்க்காவலர் தலைமறைவு

சிறிலங்கா பாதுகாப்பு படைகளில் இருந்து தப்பியோடுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தையின் மெய்ப்பாது காவலர் ஒருவரும் இவ்வாறு தப்பியோடியவர்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளார். தப்பியோடும் படை யினர் பயங்கர ஆயுதங்கள், வெடிமருந்துகளைக் கையாண்டு பொதுமக்களிடை கொள்ளையிடுதலில் ஈடுபடுவது வழமை. ரத்வத்தையின் தப்பியோடிய மெய்க்காவலர் மீண்டும் கைது செய்யப்பட்டபோதும் அவரிடமிருந்து பெருந்தொகையான வெடிமருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.

www.tamilarangam.net



## மன்னிக்க முடியாத மனித சித்திரவதைகள்

யாழ் குடாநாட்டில் சிறீலங்கா இராணுவம், அந்நிய நாடு ஒன்றுள் போர்வெறியில் செயற்படும் உணர்வுடன், தமிழ் மக்களை வாட்டி வதைத்து மனித சித்திரவதைகளிற்கு உள்ளாக்குகின்றது. படுகொலைகள் சர்வசாதாரணமான முறையில் அரசின் சாதாரண செயற்பாடுகளில் ஒன்றாக நிகழ்த்தப்படுகின்றன. தமிழ் மக்கள் மீதான சகலவிதமான இராணுவத் தாக்குதல்களும் சிறிலங்கா அரசின் தேசிய பாதுகாப்புக் கடமையாக மாற்றப்பட்டுள்ளது. வறுமை, சிங்கள மக்களின் எதிரியல்ல – வேலையில்லா திண்டாட்டம், சிங்கள மக்களின் எதிரியல்ல – பொருளாதார முறைமைகளின் பலவீனங்கள், சிங்கள மக்களின் எதிரியல்ல. தமிழர்கள்தான் சிங்கள மக்களின் எதிரிகள்! தமிழர்கள் ஒழிக்கப்பட்டால் சிங்கள மக்களுக்கு சுபீட்சம் மலரும்!! எனும் போதனை சிறிலங்கா அரசால் சிங்கள மக்களுக்கு வேதவாக்கியமாகிவிட்டது.

தமிழர்களிற்கு அழிவு என்றாலே அந்த மகிழ்வில் சிங்கள மக்கள் தமக்குள்ள பிரச்சனைகளை எல்லாம் மறந்து அரசை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கை சிறிலங்கா அரசின் செயற்பாடுகளின் மூலகாரணியாக உள்ளது.

இதனால் தான் நேற்று, "யாழ்ப்பாணத்தைப் பிடித்து விட்டோம் – புலிகளைக் காட்டுக்குள் அனுப்பிவிட்டோம்" என பிரச்சார சங்கநாதம் செய்த சந்திரிகா அரசு, இன்று, புலிகள் கொடுக்கும் செம்மையான அடிகளினால் தமது பொய்யுரையின் தன்மை வெளியானது கண்டு தவியாய் தவிக்கின்றது. இதனை மூடி மறைப்பதற்கான ஒரேமுயற்சியாக 'பாதை திறப்பு' எனும் தலைப்பில் வன்னிப் பிரதேசம் மீதான பாரிய தாக்குதல்களை நடாத்த பகீரத பிரயத்தனம் செய்து வருகின்றது.

இவ்வகையில், சிங்கள மக்களிற்கு இனவெறியை ஊட்டுவதற்கு, அப்பாவித் தமிழர்களைப் படுகொலை செய்து அவர்களது உடமைகளை அழித்தொழித்து, பொருண்மியத்தை உருக்குலைத்து, அவர்களின் நாளாந்த வாழ்வையே வாழ அனுமதிக்காது மறுக்கும் சிறீலங்கா அரசு, தனது செயற்பாடுகளால் அந்நிய அரசாக தன்னை இனங்காட்டுகின்றது.

இதனால், தமிழ்மக்கள் தமக்கான அரசியல் எதிர்காலத்தைத் தாமே நிர்ணயிக்க வேண்டிய இயல்பான தேவை தெட்டத்தெளிவாக தோன்றி விட்டதால், தங்கள் வரலாற்றுத் தாயகத்தை மீட்டெடுக்க தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை நடாத்தி வருகின்றனர். இது பிரிவினையுமில்லை – பல்லின மக்களின் பிரச்சினையும் இல்லை – சிறுபான்மை பெரும்பான்மை சிக்கலும் அல்ல – பயங்கரவாதச் செயற்பாடும் அல்ல. ஆயினும், இந்தப் பொருந்தாத தலைப்புக்களையெல்லாம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குச் சூட்டி வரும் சிறிலங்கா, இதன் மறைவில் தமிழீழ மக்களை இனஅழிப்பு செய்யும், மனிதாபிமானத்திற்கு எதிரான சகல செயற்பாடுகளையும் நியாயப்படுத்தி வருகின்றது. "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" எனும் நீதித் தத்துவம் நிலைபெற வேண்டுமானால், 'சமத்துவமின்மை' கடைப்பிடிக்கப்படக் கூடாது என்ற கோட்பாடு நிலைக்க வேண்டுமானால், தமிழீழ மக்கள் மீது சர்வதேசக் குற்றச் செயல்களைப் புரியும் சிறிலங்கா, சர்வதேச சமூகத்தால் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டப்பட்டு தனிமைப்படுத்தப்பட வேண்டும். சிறிலங்காவிற்கான சிறு ஆயுத உதவிகள் கூட 'இனக்கொலை' எனும் சர்வதேச குற்றச் செயலை ஊக்குவிக்கும் செயலாக உள்ளது என்ற உண்மையை உலக நாடுகள் ஏற்றேயாக வேண்டும். சிறிலங்காவுக்கு வழங்கப்படும் நிதி உதவிகள், அபிவிருத்திக்கு அல்ல – இனஅழிவுக்கே பயன்படுத்தப்படுகிறது என்பதை நிதி உதவி அமைப்புகள் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

பீரங்கிகளும் விமானங்களும் குண்டுபொழியும் பூமியிலிருந்து புள்ளிவிபரங்கள் சேகரிப்பதில் யதார்த்தத்தன்மை இருக்க முடியாது என்ற இயல்பை ஏற்று, சிறிலங்காவின் புள்ளிவிபர அபிவிருத்தியை நம்பாது, நாட்டின் உண்மை நிலையை தமது ஆய்வாளர்கள் ஊடாக கணிப்பீடு செய்ய வேண்டிய கடமை சர்வதேச உலகுக்கு உண்டு.

இதனைச் செய்யாது, வர்த்தக நலன்கள் – இராணுவ நோக்குகளுக்கு என சிறிலங்கா எனும் அந்நிய அரசின் கொடுங்கோன்மைகளை தமிழ் மக்கள் அனுபவிப்பதை பார்த்தும் தெரிந்தும் சர்வதேச நாடுகள் தொடர்ந்தும் மௌனமாக இருக்குமானால், அது, சர்வதேச அமைதிப் பாதுகாப்புக்கான சர்வதேச நிறுவனங்கள் மேலான மக்களின் நம்பிக்கைகளைச் சிதறடித்துவிடும். இதனைத் தவிர்ப்பதற்காகவே, ஜெனிவாவில் நடைபெற்ற ஊர்வலத்திலும், ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் உப ஆணைக்குழுவின் அமர்வுகளிலும் தமிழ் மக்கள் 'மக்கள்' என்ற தமது உரிமையுடன் தங்களுக்கு ஏற்படுத்தப்படும் இனஅழிப்புகளை – இராணுவ ஆக்கிரமிப்புக்களை முறையீடு செய்து வருகின்றனர். இவற்றுக்கு உரிய நேரத்தில் உரிய நடவடிக்கைகளை எடுப்பதில் ஏற்படும் காலதாமதங்கள், தமிழ் மக்கள் மீதான சிறிலங்காவின் இனஅழிப்பின் பங்காளிகளாக சர்வதேச நாடுகளையும், நாளை, வரலாறு இனங்காட்டச் செய்துவிடும். ஆதலால், சுருக்கமாகச் சொன்னால், தமிழ் மக்களின் மீதான சிறிலங்காவின் மனிதச் சித்திரவதைகளுக்கு ஊடகமாகச் செயற்படும் இராணுவ ஆக்கிரமிப்பை, சிறிலங்கா விலக்கச் செய்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, தமிழ் மக்களும் உலகின் மக்கள் என்ற பிறப்புரிமையைக் கருத்தில் கொண்டு, தமிழீழ மக்களுக்கு பாதுகாப்பான அமைதி ஏற்பட உலகநாடுகள் ஆவன செய்ய – புலம்பெயர் தமிழர்கள் அனைவரும் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டும். ✳

## இதுவல்ல வழி

"தற்போது அரசு நடத்தும் போர் விடுதலைப் புலிகளை பேச்சு வார்த்தைக்கு உடன்படவைக்கவா அல்லது, அழிக்கவா என்பதே தற்போது உள்ள கேள்வி. இரண்டாவது நோக்கத்திலேயே அவர்கள் போர் செய்வதாக இருந்தால் அந்த நோக்கம் நிச்சயம் நிறைவு பெறாது." இவ்வாறு தெரிவிக்கின்றார் முன்னாள் வெளிவிவாகார அமைச்சரும், ஐ.தே. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.சி.எஸ் கமீட்.

திரு. கமீட்டின் இந்தச் சந்தேகமானது நியாயமானதே. ஏனெனில், சந்திரிகா அரசு, "விடுதலைப்புலிகள் முற்றாக ஒழிக்கப்படும் வரை போர் தொடரும்" என்கின்றது. அதுவும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுரத்த ரத்வத்த போன்றோர், இதனைத் தவறாது வற்புறுத்துபவர்களாக உள்ளனர். இதே சமயம், வேறு சிலர், 'புலிகளைப் பலவீனப்படுத்தும் வரை' போர் தொடரும் எனக் கூறுகின்றனர். ஆனால் இவர்களின் பேச்சுக்களும் பலவீனமாகவே உள்ளது. இருப்பினும், அரசதரப்பு எதில் உறுதியாக உள்ளது என்பதை, எவரும் அவர்களின் பேச்சுக்களில் இருந்து உறுதி செய்துவிட முடியாது என்பதே உண்மை நிலையாகும். ஏனெனில், சந்திரிகாவின் பேச்சுக்கள், எப்பொழுதும் நிலையானவையாகவும் – உறுதியானவையாகவும் இருந்ததில்லை. இதனைத் தேர்தல் வாக்குறுதிகளை அவர் காற்றில் பறக்க விட்டிருந்ததிலிருந்தே புரிந்து கொள்ள முடியும்.

இந்த நிலையில், திரு.கமீட்டின் கேள்விகள் அர்த்தமுள்ளவையாகவே கொள்ளுதல் வேண்டும். ஏனெனில், விடுதலைப் புலிகளை போரில் அழித்தொழித்தல் என்பது சாத்தியமானது அல்ல என்பது வெளிப்படையான ஒன்று. இதற்கு விடுதலைப்புலிகள் ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை தலைமை தாங்கி நடாத்துபவர்கள் என்பதும், விடுதலைப் புலிகள் ஒரு பலமான அமைப்பாக, ஆற்றல் மிக்க தலைமைத்துவம் ஒன்றின் 'கீழ் வழிநடத்தப்படுகின்றனர் என்பதும் காரணங்களாகும். அதாவது, ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு இராணுவ ரீதியான தீர்வொன்றைக் காணமுடியாது என்பது உலக வரலாற்றின் பாடமாகும். இவ்வாறு இராணுவ ரீதியில் தீர்வைக் காண முயன்றவர்கள் தோல்வியையே கண்டுள்ளனர். அதிலும் விடுதலைப்புலிகள் போன்ற கட்டுக்கோப்புடனும், அர்ப்பணிப்புடனும் கூடிய ஓர் ஆற்றல்மிகு தலைமைத்துவம் வழிநடத்தும் விடுதலைப் போராட்டத்தினை இராணுவ ரீதியில் அழித்தொழித்தல் என்பது நடைமுறைச்சாத்தியமானதொன்றல்ல. இந்த வகையில், திரு.கமீட்டின் கூற்றுக்களில் ஒரு பகுதி மிகப் பொருத்தப்பாடானது ஆகும். இதே சமயம் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் நோக்கில், 'இராணுவ நடவடிக்கை' என்றால், அதில் அரசு ஓரளவு வெற்றி பெறலாம் என்பது விடுதலைப் புலிகளைப் பொறுத்து, பொறுத்தப்பாடானதாகக் கொள்ள வாய்ப்பில்லை.

ஏனெனில், சிறிலங்கா அரசால் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள், விடுதலைப் புலிகளைப் பொறுத்து சில பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பினும், அவை புலிகளை நிர்ப்பந்தித்து, பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வருமா என்பது கேள்விக்குறியே! அதாவது, உலகில் சில விடுதலை அமைப்புக்கள், இராணுவ அழுத்தங்கள் மற்றும் பிற அழுத்தங்கள் காரணமாகப் பேச்சுவார்த்தைகளுக்கு சம்மதித்து இருக்கலாம். ஆனால் புலிகளைப் பொறுத்தவரை, இது சாத்தியமாக இருக்கமாட்டாது. ஏனெனில், இது போன்று கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் தோல்வியைச் சந்தித்துள்ளன. அதிலும், ஐக்கிய தேசியக் கட்சியின் முயற்சிகள் – குறிப்பாக, கமீட் அவர்கள் அமைச்சராக இருந்த போதும் மேற்கொள்ளப் பட்டிருந்தன. ஆனால், புலிகள் அவ்வாறான நிர்ப்பந்தங்கட்கு பணியவில்லை என்பதே வரலாறு ஆகும். இந்த வகையில் திரு.கமீட் கருதுவது போன்று, புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பதைக் கூட இந்த நடவடிக்கைகள் உதவுமா என்பது சந்தேகமே. ஏனெனில், புலிகள் எப்பொழுதுமே நிர்ப்பந்தப் படுத்துபவர்களுக்கு பணியும் போக்குக் கொண்டவர்கள் அல்ல. அவர்கள் எப்பொழுதுமே நிர்ப்பந்தம் எதுவும் அற்ற – தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய – சமரசப் பேச்சுக்களை ஏற்படுத்துமாறு வலியுறுத்தி வருபவர்கள். ✳

நன்றி : ஈழநாதம்

## மூன்று மாதப் பெறுபேறு

ஜெயசிக்குறுய் படை நடவடிக்கை ஆரம்பமாகி மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. இந்த நிலையில் இப்படை நடவடிக்கை பற்றி மதிப்பீடு செய்துள்ள 'திவியின' செய்தியாளர் தினசேன ரத்துகம, சிறீலங்கா ஆயுதப்படையினருக்கும் மக்களுக்கும் பாரிய இழப்பீட்டினைச் செய்தது மட்டுமே ஜெயசிக்குறு படையெடுப்பின் பெறுபேறு என தெரிவித்துள்ளார். தினசேன ரத்துகமவின் இம்மதிப்பீட்டை இவ்வழிவு நடவடிக்கையை உன்னிப்பாக அவதானிப்பவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று கூறலாம். ஏனெனில், மூன்று மாதம் தொடர்ந்து இடம் பெறும் இவ் இராணுவ நடவடிக்கையானது சிறீலங்கா அரசின் இராணுவ நடவடிக்கையின் மிக நீண்டகால படை நடவடிக்கை என்பது மட்டுமல்ல இதுவரையில் அது தனது இலக்காக எட்டவில்லை என்பதோடு இனிமேலும் இலக்கு எட்டப்படுமா என்ற கேள்வியை இப்படை நடவடிக்கையின் தற்போதைய நிலை குறித்துக் காட்டுகின்றது. ஆனால், இப்படை நடவடிக்கையானது தினசேன ரத்துகம குறிப்பிட்டுள்ளதுபோல ஆயுதப்படையினருக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட

தொடர்ச்சி 6 ம் பக்கம்...

www.tamilarangam.net



# "இராணுவம் இருக்கும்வரை மக்களின் வாழ்வு வழமைக்கு திரும்பவே திரும்பாது"

## - அமலமரி தியாகிகள் சபை தலைமைக் குழு தகவல்

"யாழ் குடாநாட்டில் சில பகுதிகளில் மக்களை விட இராணுவத்தினரே அதிக அளவில் உள்ளனர். பலாலி வீதி முற்றாக இராணுவ நடமாட்டத்திற்கே உரியது. இவ் வீதியில் போக்குவரத்துச் செய்யும் மக்களின் வாழ்க்கை நிரந்தரமற்றதாக உள்ளது. இந்த வீதியில் துவிச்சக்கர வண்டியில் செல்லும் ஒருவர் எந்த நிமிடம் இராணுவ வாகனத்தால் மோதப் படுவார் எனக் கூறமுடியாது.

யாழ் பிரதான வீதிகள் ஒவ்வொன்றிலும் பல சோதனைச் சாவடிகள் – காவல் அரண்கள் – தடை முகாம்கள். ஒவ்வொரு தடைகளிலும் இறங்கி சைக்கிளை உருட்டிக் கொண்டே செல்ல வேண்டும். எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம். உதாரணமாக, மானிப்பாய் பங்குத் தந்தை மோட்டார் சைக்கிளில் தடைமுகாம் ஒன்றைக் கடந்து 50 யார் கூட போகவில்லை, எங்கோ குண்டு வெடிச்சத்தம். அவ்வளவுதான். அவரைச் சுற்றிவர துப்பாக்கி ரவைகள் பறந்தன. அதிஸ்டவசமாக அவர் காயங்களின்றி தப்பினார். இருப்பினும் பல பொதுமக்கள் இதில் காயப்பட்டனர்"

இவ்வாறு யாழ். மக்களின் இன்றைய வாழ்வுநிலை குறித்து அமலமரி தியாகிகள் சபை குரு முதல்வர் எடுத்து விளக்கியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது: "யாழ்ப்பாணத்தில் மிகப் பயங்கரமான இராணுவப் பகுதியாக நாவாந்துறைப் பிரதேசம் உள்ளது. அதிக சோதனைகளும் அதிக இராணுவ நடமாட்டங்களும் உள்ள பகுதியாக மானிப்பாய், ஆனைக்கோட்டை பகுதிகள் காணப்படுகின்றன. பலாலி விமான நிலையத்திற்கு மேற்குப் பக்கமாக கீரிமலை, இளவாலை, சில்லாலை, பண்டத்தரிப்பு, மாதகல் பகுதிகளுடாக கரை ஓரமாக பெரிய வேலி போன்ற பாதுகாப்பரண் இராணுவத்தால் கட்டப்பட்டுள்ளது. நாவாந்துறை வரை இது தொடர்கிறது.

இதேபோன்று வல்லைவெளி முதல் கொடிகாமம் வரை ஒரு பாதுகாப்பரண் அமைக்கப்பட்டுள்ளது. இது பொது மக்களின் வீடுகளை உடைத்து எடுக்கப்பட்ட கற்களைக் கொண்டே அமைக்கப்பட்டுள்ளது. இப்படியாக அரண்களால் சூழப்பட்ட பகுதியில்தான் மக்கள் இருக்கின்றனர். இத்தனை கெடுபிடிகளுக்கு மத்தியில் மக்கள் எவ்விதம் உளவியல் மகிழ்ச்சியுடன் வாழமுடியும்?

1995 ஆண்டு இடப்பெயர்வின்போது, மிருசுவில், மீசாலை, எழுதுமட்டுவாள் பகுதிகளில் மக்கள் நின்ற வேளையில், பளை ஊடாக இராணுவம் தாக்க முற்பட்ட போது அதற்குள் அகப்பட்டுக் கொண்டனர். இராணுவத்தின் நிர்ப்பந்தங்களைத் தாங்கித் தாங்கியே வாழப் பழகிவிட்ட மக்கள் மற்ற இடங்களில் இருந்து துன்பப்படுவதைவிட வீட்டில் போய் என்றாலும் சாவோம் என்ற விரக்தி நிலையிலேயே யாழ்ப்பாணத்துக்குத் திரும்பியுள்ளனர்.

இராணுவத்தினர் இரவில் வீடுகளுள் புகுந்து அட்டகாசம் செய்கிறார்கள். பாடசாலைப் பிள்ளைகள் போய்வரும் வழியில் அவர்களைப் பின் தொடர்ந்து வீடுகளைப் பார்த்து வைக்கும் இராணுவத்தினர், இரவில் வீடுகளுள் புகுந்து அவர்களைப் பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்துகின்றனர். சில சம்பவங்கள் வெளிவரும் – பல வெளிவருவதில்லை. ஏனெனில், இராணுவத்தினரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு யாரும் உதவப் போவதில்லை. பலர் அமைதியாக இருந்து விடுகின்றனர். எனது பார்வையில், இராணுவம் இங்கு இருக்கும்வரை மக்களுடைய வாழ்க்கை இயற்கை நிலைக்கு ஒருபோதும் திரும்பி வரப் போவதேயில்லை.

இராணுவம்தான் இங்கு நிர்வாக ஆட்சியை வைத்துள்ளது. அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம், யாழ். செல்ல விரும்பும் அகதி ஒருவருக்கு 250 ரூபா கொடுத்தாலும் அரசு, 50 ரூபா மட்டுமே கொடுக்கிறது. அதற்கு மேல் கொடுக்க இராணுவம் அனுமதிக்காது. சுருங்கச் சொன்னால் சில வழிபாடுகளில் கூட மக்களிலும் பார்க்க இராணுவத்தினர் அதிகமாகக் காணப்படுவர். என்னைக் கண்டதும் பங்கு மக்கள் அழுத அழுகை ஒரு செத்தவீட்டைப் போன்றது. தினமும் இறந்து கொண்டிருக்கும் மக்களிற்கு கண்ணீர் சிந்துவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாது தவிக்கின்றனர்" என்றார். ✳

# தாங்கி அணியை தகர்த்து......

பொருத்தப்பட்ட இராணுவக் கவசவாகனம் எதுவித பழுதுமின்றி கைப்பற்றப்பட்டது. பீரங்கிக்கான எறிகணைகள், நவீன ஆயுத தளபாடங்கள், தொலைத் தொடர்பு கருவிகள், வெடிபொருட்கள், இராணுவ உபகரணங்கள் போன்றனவும் கைப்பற்றப்பட்டன. தாக்குதலின் உக்கிரத்தை எதிர்கொள்ள முடியாமல் படையினர் பின்வாங்கிக்விட்டனர்.

படையினர் தரப்பில் ஏற்பட்ட இழப்பை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சகம் மறைக்க முயன்ற போதும், 29 படையினர் பலியானதாக ரொய்ட்டர் செய்தித் தாபனம் தெரிவித்த அதே வேளையில், 57 இராணுவத்தினர் பலியாகினர் என வவுனியாவில் உள்ள இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும், 6 அதிகாரிகள் உட்பட 58 பேர் காயமடைந்திருப்பதாக சிறிலங்கா படைத்தரப்பு அறிவித்தபோதும், காயமடைந்தவர்கள் தொகை 200க்கும் அதிகம் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. இச் சண்டையில் 7 விடுதலைப் புலிவீரர்கள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இது இவ்வாறிருக்க, தனது தரப்பு இழப்பை மறைத்து, வழமை போலவே விடுதலைப் புலிகளின் தரப்பில் அதிக இழப்புக்கள் என பொய்ப் பரப்புரையில் சிறிலங்கா அரசு ஈடுபட்டது.

இவ்வாறான தொடர் பொய்ப் பரப்புரைகளை அடுத்து, விடுதலைப் புலிகள் ஓர் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளனர். அவ் அறிக்கையில், "விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவடையும் போராளிகள் தொகை பற்றிய விபரங்களை எக்காலகட்டத்திலும் விடுதலைப் புலிகள் மறைத்ததில்லை. தமிழீழத் தேசத்திற்காக ஆயுதம் தரித்த நாளில் இருந்து இதனை எமது இயக்கம் கண்டிப்பாகக் கடைப்பிடித்து வருகின்றது. வீரச்சாவடையும் போராளிகளின் தொகையை மறைப்பது, அம் மாவீரர்களுக்கும், அவர்கள் போராடும் கொள்கைக்கும் செய்யப்படும் அவமதிப்பாகும். சிறிலங்கா அரசோ, கொல்லப்படும் தனது படையினரின் சரியான எண்ணிக்கையை வெளியிடாது, அவர்களின் சடலங்களைக் கூட ஏற்க மறுத்தும், சண்டையில் 'காணாமல் போனோர்' என்ற பெயரில் அவர்களை மறைத்தும் வருகின்றது" என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புளியங்குளம் நோக்கிய ஆக்கிரமிப்புப் படையணிக்கெதிரான சண்டைகளில், கடந்த 19ஆம் திகதியில் இருந்து 23ஆம் மிகதி வரைப்பட்ட நான்கு நாள் சண்டையில், எழுபத்தியாறு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர் என தலைமைப்பீட அறிக்கை தெரிவிக்கின்றது. தாயக விடுதலை ஒன்றே தாகமாய்க் கொண்டு களமாடி, விதையாகி வீழ்ந்த மாவீரர்களுக்கு எமது வீரவணக்கம். புளியங்குளம் நோக்கி ஆக்கிரமிப்பு நகர்வைத் தொடர முயற்சிக்கும் சிங்களப் படை, 19ஆம் திகதியில் இருந்து 22ஆம் திகதி வரை நடந்த சண்டைகளில் 100றக்கும் அதிகமான தனது சிப்பாய்களை இழந்துள்ளது.

அத்துடன் 350 பேரளவில் காயமடைந்துள்ளனர் என சிறிலங்கா பாதுகாப் பமைச்சை ஆதாரம் காட்டி ஏ.எப்.பி. செய்தித் தாபனம் செய்தி வெளியிட்டுள்ளது. ✳

# இலக்குத் தீர்மானிக்கப்பட்டே குண்டுகள் .......

தலத்திலும், ஒருவர் வைத்தியசாலையிலும் கொல்லப்பட்டது தொடர்பாக, கத்தோலிக்க மதகுரு மொறிஸ், ஐக்கிய நாடுகள் அகதிகள் தூதுவராலயத்திற்கு மல்லாவியில் வைத்து கையளித்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மேற்குநாட்டு அரசுகள் மற்றும் ஆசிய நாட்டு அரசுகளோ சிறிலங்காவிற்கு உதவிகளையும், இராணுவப் பயிற்சிகளையும் வழங்கி வருவதாகவும் தமிழ் மக்களுக்கு எதிரான இந்தப் போருக்கு உதவி புரிவதன்மூலம் அரச பயங்கரவாதத்திற்கு உதவிபுரியும் குற்றச்சாட்டுக்கு இவையும் ஆளாகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்காவின் வான்படையினர் 15.8.97 அன்று வவுனிக்குளம் கத்தோலிக்க தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த அகதிகள் மேல் நடாத்திய கொடிய தாக்குதலில் 9 பேர் அவ்விடத்திலேயே பரிதாபகரமாக இறந்தனர். காயமடைந்த 15 பேரில் ஒருவர் வைத்தியசாலையில் மரணமாகியுள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் பெயர் விபரம்

தேசிங்கராஜா தங்கமணி (48)

தேசிங்கராஜா வசந்தகுமாரி (17)

நடராசா புஸ்பமலர் (41)

நடராசா கஜன் (4)

பொன்னுத்துரை அன்னமலர் (40)

துரைரட்ணம் பரமேஸ்வரி (46).

மூவர் அடையாளம் காணப்படவில்லை. மேலும் வைத்தியசாலையில் காயமடைந்து அனுமதிக்கப்பட்டவர்களுள் மூன்று பிள்ளைகளின் தாயான 55 வயது மார்க்கண்டு ராசமலர் மல்லாவி மருத்துவமனையில் இறந்துள்ளார்.

இக் கோரச் சம்பவத்தை அடுத்து, சிறிலங்கா அரசின் தமிழினப் படுகொலையைக் கடுமையாகக் கண்டித்து, விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். மோசமான இந்த நடவடிக்கை குறித்து சர்வதேசத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்த விடுதலைப் புலிகளின் இவ் அறிக்கை, இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் பொதுமக்கள் மீதும் தேவாலயங்கள், பாடசாலைகள் மீதும் சிங்களப் படை நடாத்திய வெறியாட்டத்தில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் விபரத்தைப் பட்டியலிட்டுள்ளது. இந்த மனித அவலத்தை ஏற்படுத்தும் விமானங்கள், ஆயுதங்கள் மற்றும் இராணுவச் சாதனங்களை சிறிலங்காவிற்கு விற்பனை செய்யப்படுவதையும், அத்தகைய ஆயுதங்களைக் கொண்டு சிறிலங்கா அரசு அப்பாவிப் பொதுமக்கள் மீது உபயோகிப்பதையும் அமெரிக்க அரசு அனுமதிக்கக் கூடாது எனவும் விடுதலைப் புலிகள் தமது அறிக்கை வாயிலாக வேண்டுகோள் விடுத்துள்ளனர். ✳

## 'நெம்பு' - புதிய அரசியல் விஞ்ஞான நூல்

'நெம்பு' எனும் தலைப்பில் புதிய அரசியல் – விஞ்ஞான ஆய்வுச் சஞ்சிகை ஒன்று தமிழீழத்தில் வெளிவரத் தொடங்கியுள்ளது. இந்தச் சஞ்சிகையில் வரலாறு, அரசியல், சமூக, பொருளாதார ஆய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. சிறீலங்காவின் முற்றுகைக்கு மத்தியிலும், இத்தகைய சிறந்த ஆய்வுச் சஞ்சிகை தமிழீழத்திலிருந்து வெளிவருவது, தமிழீழ மக்களின் விடா முயற்சிக்கு எடுத்துக் காட்டாகியுள்ளது. ✳

# பாலியல் துன்புறுத்தல் .....

அரசு அடிப்படை மனித உரிமைகளை வன்முறைப் படுத்துவதற்கு சான்றுகளாக உள்ளன. இவ்வாறான பெண்களிற்கெதிரான வன்முறைகளின் சகல வடிவங்களையும் நிறுத்து மாறு சம்பந்தப்பட்ட நாட்டினை கோருவதுடன், பெண்களிற்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் வழி செய்யப்படல் வேண்டும். பெண்கள் மீது வன்முறையினை பிரயோகிப்பவர்கள், அவர்களை அடக்குமுறைக்கு உள்ளாக்கு பவர்கள் யாவரும் சர்வதேசக் குற்றவியல் நீதி மன்றத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்" என பக்ஸ் ரோமன் (Pax Romana) எனும் சர்வதேச கத்தோலிக்க அமைப்பு, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உப ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளது. ✶

www.tamilarangam.net



# போரின் அரசியல்

**போ**ரே அரசியலாகிவிட்ட இன்றைய நிலையிலே போரின் அரசியல் என்றொன்று இருக்கமுடியுமா? என்கின்ற கேள்வி எழுவது நியாயமானதுதான். ஆனால், இதுகூட போரின் அரசியல்தான். மிக அபூர்வமான ஒற்றுமைத்தன்மை ஒன்றைக் கொண்டு, அதேவேளை, முற்றிலும் மாறுபட்ட, முரண்பட்ட திசையில் பயணிக்க விரும்பும் இரு தேசிய இனங்களின் போரின் அரசியல் இது. 'போரே வேண்டாம்' என உலகம் முற்றும் உரத்துக் கூறுகையில், போரையே முதன்மைப்படுத்தி அதை நம்பியே தனது எதிர்காலத்தைத் திட்டமிடும் சிங்கள தேசம் இன்று என்ன செய்கின்றது? மின்னியல் ஊடகங்களை உலகம் நவீன அறிவியலின் உச்சத்தை யெட்ட பயன்படுத்துகையில் சிறிலங்கா எதற்குப் பயன்படுத்துகின்றது? இப்போது அங்கு மின்னியல் ஊடகங்களில் முதன்மை நிலை வகிக்கும் ரூபவாகினியே போர்க்கோலம் பூண்டு விட்டது. மேலும் கீழும் மிகத்தடிப்பாக 'ஜயசிக்குறுய்' என எழுதப்பட்டு (கவனிக்கவும்–தமிழில் அல்ல) அதன் மத்தியிலே 'ராங்க்' ஒன்றில் குந்தியிருந்து சிங்களப் படை நகர்வது போன்ற ஒளித்தோற்றத்தின் பின்னணியில் இராணுவ செய்திகள் யாவும் வடிகட்டப்பட்டு தேவையான வகையில் வடிவமைக் கப்பட்டு நாளாந்தம் சிங்களவர் நித்திரைக்கு போகமுன்னர் ஊட்டப்படு கின்றன. சிங்கள தேசம் வெற்றிகரமாகத் தமிழர் தாயகத்தினுள் படையெடுப்பை நிகழ்த்துகின்றது என்பதன் குறியீடு இது.

சந்திரிகா அம்மையாரின் பதவியேற்போடு, வரலாற்று ஓட்டத்திற்கு மாறாக சிந்திக்க வைக்கும் மயக்க மனநிலையொன்றில் சிங்களவரை உறைய வைப்பதற்கு அரசியல் வாதிகட்கு இருவழிகள் நிரந்தரமாகிவிட்டன. ஒன்று, புலிக ளுடனான போர் பற்றிய மிகைப்படு த்தப்பட்ட செய்திகள், காட்சிகளை தொடர்ந்து வெளியிடல்: இங்கு சிங்களப்படையால் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் புலிகளின் எண்ணிக்கை முக்கியம் பெறும். இரண்டு, சந்திரிகா அம்மையாரின் அரசியல் அணி போலாகிவிட்ட சிங்களத்தின் துடுப்பாட்ட அணியின் பல்வேறு வெற்றிக்கிண்ண கோப்பைகளுக்கான தொடர் ஒளிபரப்பு க்கள்: இங்கு சிறீலங்கா அணிபெறும்



ஓட்டங்கள் முக்கியம் பெறும். கூர்ந்து நோக்கினால் இவை இரண்டு வழிகளிலுமே சிங்களம் எப்படியேனும் வெல்லவேண்டும் என்கிற பேராவல்– உளவியல்பரிமாணம்–கொண்டதொரு ஆழமான கருத்தோட்டம் சிங்களவரை பற்றி நிற்பதை அவதனிக்க முடியும். பல்லாயிரமாண்டு கால வரலாற்றினைக் கொண்டதாகக் கூறிக்கொள்ளும் சிங்களத்திற்கு இன்று வாய்த்திருப்பது அதே வரலாற்றின் விளைபொருளான இந்தத் தாழ்வுச்சிக்கல் தான். இதனையே– இந்த ஆபத்தான குணக் குறியையே–சந்திரிகா– றத்வத்த குழு வெகு நுட்பமாக பயன்படுத்துகின்றது. எனவேதான் துட்டகைமுனு–விகார மாதேவி மீள் உருவாக்கம்: யாழ்ப்பாணத்திலே சிங்கக் கொடியேற்றம் சப்புமால்புர. பெயர் மாற்றம்: முன்னைய சிங்கள மன்னரை நினைவுபடுத்தும் றத்வத்தவின் செயற்பாடுகளின் தோற்றம் என்பன சிங்கள அரசியல் அரங்கிலே அரங்கேறுகின்றன. இப்போர் அரசியலை இன்னொரு வகையில் கூறினால் அது இப்படித்தான் அமையும். இப்போது வேறு தொழிலின்றி தந்தையாரின் லங்கா காடியன், ஏட்டினைப் பொறுப்பேற்று நடத்தும் தயான் ஜெயத்திலக்க மிகுந்த மனக்கவலையோடு சில காலம் முன்னர் என்ன கூறியிருந்தார்? "புலிகளுடனான



போரில் சிங்களவர் தோற்றால்.....? நினைத்துப் பார்க்கவே முடியாத விளைவுகளை இது ஏற்படுத்தும்.

இத்தோல்வி சிங்களவரின் உளவியல் உறுதியை வெகுவாக பாதித்து, அவர்களின் சமூக, பண்பாட்டு வாழ்கை முறையையே சிதைத்துவிடும்" என்றார். எனவேதான் இப்போது மேற்கொள்ளப்படும் ஜயசிக்குறுய் இரணுவ நடவடி க்கையானது முன்னைய சிங்கள மன்னர்களினது படையெடுப்புக்களின் மறுபாதிப்பாகவும் அதேவேளை, இம்முறை வெற்றி நிச்சயம் எனவும் சிங்களவருக்கு கற்பிக்கப்படுகின்றது. அதாவது: உலகம் 21–ம் நூற்றாண்டை நெருங்கும் போது சிங்களம் 12–ம் நூற்றாண்டிற்கு பயணம் செய்ய விரும்புகின்றது. எத்தகைய முரண் இது?

இப்பயணத்தின் விளைவு–இப்போது வன்னி மண்ணிலே போரோசை உரத்தொலிக்கத் தொடங்கிவிட்டது. எப்படிப்பட்டதொரு அவல வாழ்க்கை மீண்டும் எம்மக்கள் மேல் திணிக்கப்படுகின்றது! வன்னி மண்ணிலே தொடரான பெரும்படை நகர்வுகளை மேற்கொண்டு எம்மண்ணின் பெரும் பகுதியை யாழ்ப்பாணத்தில் செய்தது போல ஆக்கிரமித்து– தமிழ்மக்களின் நெஞ்சக் கூட்டிலே அகல் விளக்காகக் கனலும் விடுதலைத் தீயைக் கருக்கி விடலாம்: நிலப்பரப்புக்களை கைப்பற்று வதன் மூலம் தமிழீழ மக்களின் மனப்பரப்பிலிருந்து புலிகளை அகற்றி விடலாம் என சிங்களம் எண்ணுகின்றது. எப்படிப்பட்ட அறியாமை இது? எப்படியாவது புலிகளை வென்றுவிட வேண்டும் என்கிற பேராசை றத்வத்தவை பேயாகப் பிடித்தாட்டுகின்றது. ஆனால் வரலாற்றுத் தாயால் பிறப்பிக்கப்பட்டு, இயற்கையன்னையால் வளர்க்கப்பட்ட தலைவரின் போரின் அரசியலை இவர்களால் புரிந்து கொள்ள முடியுமா? எல்லாச் சோதிடர்களையும் அழைத்து சுபயோகம் பார்த்து, பிக்குகள் பிரித் ஓதி, நூல்கட்டி, ஆசி வழங்க, மே 13ஆம் திகதி சுபவேளை அதிகாலை 05.20மணிக்கு தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் இன்றைய நிலை யென்ன? தாண்டிக்குளம்–நொச்சி மோட்டையில் தடாலடி, பன்றிக் கெய்தகுளம்– பனிக்கநீராவியில் பேரிடி என்றான பின்னர். தலைவரின் போரின் வேர்களைத் தேடி சிங்களம் இப்போது சன்சூ தொட்டு மாவோ, கியாப், சே வரை தேடுதல் நடத்துகின்றது. தேடிப்பிடித்து சன்சூ சொன்ன உத்தியொன்றை மேற்கோள் காட்டுகின்றது. "எல்லாப் போர்களும் ஏமாற்றுதல்

என்பதனையே அடிப்படையாகக் கொண்டவை. எதிரியை தாக்கமுடியும் என்கின்ற போது தாக்க முடியாதவன் போலிரு: உனது பலத்தை காட்ட முடியும் என்கின்ற போது இல்லதாவன் போலிரு: நெருங்கும்போது தொலை விலிருப்பவன் போல் தோற்றம் காட்டு பலவீனப்பட்டவன் போலிரு: அப்போது எதிரி அகந்தையின் உச்சிக்கே செல்வான்



அப்போது எதிரியை இரையைக் காட்டி ஈர்த்து இழு, இறுதியில் நசுக்கிவிடு.

இவையே வெற்றிக்கான உறுதியான வழிகள். ஆனால் எப்போதும் உச்ச இரகசியம் பேண்" இதனை யார் சென்னது? சன்சூவா? பிரபாகரனா? சிங்களம் குழம்புகின்றது. பொருத்தமான இராணுவத் தலைமை இப்போது தான் பொருந்தி வந்தது எனக் கூறிய அதே வாய்கள், குறுகிய சந்தர்ப்பவாத அரசியல் நோக்கத்திற்காக தளபதிகளின் எச்சரிக்கையைக் கேளாமல் றத்வத்த நடத்தும் போரிது என்றும். தனிப்பட்டஒருவர் பட்டங்கள் பெற போரை நடத்துவதா? என்றும் பொருமுகின்றன. இது சிங்களத்தின் நிலை.

இனி, தமிழீழத்தின் போரின் அரசியலுக்கு வருவோம். விடுதலைப் போராட்ட

வே. பாலகுமாரன் (தமிழீழம்)

வரலாற்றிலே தீர்க்கமான சமர் ஒன்றைச் சந்திக்கும் பெரும் பொருது களமாக மாறிவிட்ட வன்னி மண், விரைவில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்திய மண்ணாக விதந்து பாராட்டப் படப்போகின்றது. இவைவெறும் வெற்று வார்த்தைகளல்ல: பல்லாயிரமாண்டு கால வரலாற்றின் விளைபொருள்தான் இதுவும். இது தாழ்வுச் சிக்கலல்ல: தாழ்ந்த இனமொன்று தலை நிமிரவேண்டிய சீரின் சிக்கல். ஐதீகங்களோ. கற்பனைக் கோட்பாடுகளோ கற்பிதங்கள் ஆக்கப்பட வில்லை. யாதார்த்தம் இது. எவ்வாறு என எவரும் வினவலாம்? சில வரலாற்றுக் குறிப்புக்களை வேகமாகப் பார்க்கலாம்! கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலே வன்னியில் சிற்றரசுள் இருந்தன. யாழ்ப்பாணம் எழுச்சிபெற முன்னரே வன்னியில் வன்னிமைகள் இருந்தன. இவை அனுராதபுர அரசின் எழுச்சியோடு தளர்வடைந்தன. இத்தகைய வன்னிமைகளில் தாற்போதைய வவுனியா, முல்லைத்தீவு, கிளிநெச்சி, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கிய அடங் காப்பற்று வன்னிமைகளில் முக்கியம் பெறுகின்றன... அடங்காப்பற்று

தொடர்ச்சி 12 ம் பக்கம்...

**தலைவரது போரின் வேர்களை,சிங்களம் இப்போது, சன்சூ முதல் மாவோ, கியாப், சே வரை தேடிவருகின்றது. ஆனால், வரலாற்றுத்தாயால் பிறப்பிக்கப்பட்ட அவரது, போரின் அரசியலை இவர்களால் புரிந்துகொள்ள முடியுமா?**

**நிலப்பரப்புக்களை கைப்பற்றுவதன் மூலம், தமிழீழ மக்களின் மனப் பரப்புகளைக் கைப்பற்றலாம் என் பது சிங்களத்தினது போரின் அரசியல்.**

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் பதினாறு

(தொடர்ச்சி)

**லியோன் யூரிஸ்**

பிரெஞ்சு உரிமையாளர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட லொறிகளைப் பிரெஞ்சுச் சாரதிகளே ஓட்டினர். பிரிட்டிஷார் நன்றாகக் குழப்பமடைந்துவிட்ட நேரத்தில் உண்மையான பயணம் மேற்கொள்ளப்பட்டது. கரேனுடைய குழுவையும் உள்ளடக்கிய 1600 அகதிகள் லாசியோடாட்டிலிருந்து விரைவாக வெளியேற்றப்பட்டுக் கடற்கரையோரமாக ஒரு இரகசிய சந்திப்பிடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இந்த முழுப்பிரதேசமும் வேறு போக்குவரத்துக்குப் பிரெஞ்சு இராணுவத்தினரால் தடைசெய்யப்பட்டது. லொறிகளில் இருந்து ஒரு அமைதியான கடற்கரைப் பகுதியொன்றில் இறக்கப்பட்ட அகதிகள் இறப்பர் படகுகளில் கரையிலிருந்து சிறிது தொலைவில் காத்துக் கொண்டிருந்த புராதனமான கார்பாத்தோசுக்கு மாற்றப்பட்டனர்.

இறப்பர்ப் படகுகளில் முன்னும் பின்னுமான ஊர்வலம் முழு இரவும் நடந்தது. அமெரிக்க மாலுமிகளின் பலமான கரங்கள் ஆவலோடிருந்து தப்பிச் செல்வோரை, கப்பலுக்குள் இழுத்தெடுத்துச் சேர்த்தன. கப்பலிற் தயாராய் இருந்த பால்மாக் குழுக்கள் ஒவ்வொரு படகுகளில் வந்தவர்களையும் முன்பே நிர்ணயிக்கப்பட்ட இடங்களுக்குக் கொண்டு போய் விட்டனர். ஒரு சிறிய தோற்பை, ஒரு போத்தல் நீர், ஐரோப்பாவை விட்டுப் போகவேண்டும் என்ற நிச்சயமான பிடிவாதம் இவையே அகதிகள் வசம் அப்போதிருந்த சொத்துக்களாகும்.

முழுப்பேரிலும் வயது குறைந்தவர்களான கரேனுடைய குழுவிலிருந்த பிள்ளைகளே முதலில் ஏற்றப்பட்டனர். கீழ்த் தளங்களில் விசேட இடமொன்றில் விடப்பட்டனர். அவர்கள் மேல் தளத்திற்கு அடுத்த தளத்தில்விடப்பட்டனர். அங்கிருந்து ஒரு ஏணி மேல்தளத்திற்குச் சென்றது. அவர்களை அமைதிப்படுத்த கரேன் விரைவாக வேலை செய்தாள். அதிஷ்டவசமாக், அனேகமானனோர், பதகளிப்பினாலும், களைப்படைந்திருந்தாலும் நேரடியாகவே தூங்கிப்போய் விட்டனர். சிலர் அழுதனர், ஆனால் அவள் அவர்களைத் தேற்றிவிட்டாள்.

ஒரு மணித்தியாலம், இரண்டு மணித்தியாலம் என நேரம் கடந்து கொண்டிருந்ததோடு, அந்தத் தளமும் நிறைய ஆரம்பித்தது. அங்கேயிங்கே அசைவதற்குச் சிறிதளவு கூட இடமில்லாத கட்டம் வரை அகதிகள் வந்து கொண்டிருந்தனர்.

இதன்பின் மேல் தளத்தை நிரப்ப ஆரம்பித்தனர். அங்கும் ஆட்கள் நிறைந்து, கப்பலின் செலுத்தும் பகுதியினுள்ளும் சென்றுவிட்டனர். பில் பிறை (Vill fry ) எனப் பெயர் கொண்ட கப்பலின் அமெரிக்க கப்டன் ஏணியால் இறங்கி வந்து கீழே நிறைந்திருந்த மனித வெள்ளத்தை கண்டு மெதுவாக சீட்டியடித்துக் கொண்டான். குட்டையான, தாடியைக் கொண்டிருந்த தடித்த மனிதனான அவன் பற்களுக்கிடையில் பற்ற வைக்கப்படாத சுருட்டொன்று இருந்தது.

"பொஸ்டன் தீயணைக்கும் படையினர் இப்படியான அறையில் இப்படியான தொகை ஆட்களைக் கண்டால் எப்படி அலறுவார்கள் தெரியுமா?" என்று மெதுவாக முணுமுணுத்தான்.

திடீரென அவன் பேசுவதை நிறுத்திவிட்டுக் கூர்மையாக எதையோ கேட்டான். நிழல்களிடையே ஒரு மிக இனிமையான குரல் தாலாட்டொன்றை இசைத்துக் கொண்டிருந்தது. அவன் ஆட்களைத் தள்ளிக்கொண்டே ஏணியில் இறங்கி வந்து உடல்களுக்கு மேற் கடந்து வந்து, டோச் ஒளியைச் செலுத்திய இடத்தில், கரேன் ஒரு சிறுவனைக் கரங்களில் ஏந்தித் தாலாட்டினால் தூங்கவைத்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்துக்குத் தான் தேவமாதாவையே காண்பதாக அவன் மயங்கினான். அவன் கண்கள் குழப்பத்தால் அடித்துக் கொண்டன. கரேன் அவனை நிமிர்ந்து பார்த்து, டோச் ஒளியை தன் முகத்திலிருந்து அகற்றுமாறு அவனுக்கு சைகை செய்தாள்.

"நீ ஆங்கிலம் பேசுவாயா?" பில்லின் கரகரப்பான குரல் பேட்டது "ஆம்" என்றாள்.

'இந்தக் குழந்தைகளின் பிரிவுத் தலைவன் எங்கே?'

"நான்தான் இந்தப் பிரிவுத் தலைவி. தயவுசெய்து உங்கள் குரலைத்தாழ்த்திக் கொள்ளுங்கள். இவர்களை மிகக் கஷ்டப்பட்டே தூங்க வைத்தேன்."

"நான் இந்தக் கப்பலின் கப்டன். எனக்கு வேண்டியபடி உரக்கப்பேசுவேன். நீ கூட இந்தச் சிறியவர்களை விட அவ்வளவு பெரியவளல்ல."

"நான் இந்தப் பிரிவை நடத்துவது போல் நீ உன்னுடைய கப்பலை நடத்தினால், நாங்கள் விடியும்போது பலஸ்தீனத்தில் இருப்போம்." கோபமாக வெடித்தாள் கரேன்.

தொடரும்...

# மூன்று மாதப் ......

பாதிப்பானது பெரியளவினதாகும். இப்படை நடவடிக்கையின் போது ஆயுதப் படைத் தரப்பில் ஏற்பட்டுள்ள இழப்பினை அரசாங்கம் மூடி மறைப்பதில் மிக அக்கறை காட்டினும் கூட இம்மூன்று மாத கால மோதல்களில் குறைந்தது ஆயிரம் படையினர் கொல்லப்பட்டதோடு 2500 படையினருக்கு மேல் காயப்பட்டும் உள்ளனர். அத்தோடு இப்படை நடவடிக்கையின் போது புலிகள் நடாத்திய பதிலடி நடவடிக்கையின் போதும் ஆயுதப்படையினர் பெருமளவு ஆயுத தளபாடங்களை இழந்தும் உள்ளனர். இதில் புலிகளிடம் பறிகொடுத்தவையும் புலிகளால் அழிக்கப்பட்டவையும் அடங்குகின்றன. இவ்வாறு இழக்கப்பட்டவற்றில் டாங்கிகள், பீரங்கிகள் என்பன அடங்குவதோடு பெருமளவு வெடிப்பொருட்களும் உள்ளடங்குகின்றன. இந்த வகையில் ஆயுதப் படையினரின் இழப்புக்கள் ஏதோ ஒரு வகையில் வெளிவந்துள்ளது என்று கூறலாம். அதாவது அரசாங்கம் இராணுவ இழப்புக்களை மறைக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் தோல்விக்குள்ளாகின என்றே கூறலாம். ஆனால், இராணுவம் மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கையினால் மக்களுக்கு குறிப்பாக தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் மறைக்கப்படாவிடினும் அது குறித்துப் பெரிய அளிவில் கவனத்தில் கொள்ளப் பட்டதாகவும் இல்லை. இப்படை நடவடிக்கையானது ஒட்டுமொத்தமாக வவுனியா வடக்குப் பிரதேசத்திலும் மணலாற்றுப் பிரதேசத்திலும் இருந்து தமிழ் மக்களை அகதிகளாக்கியுள்ளது. இதனால் சுமார் ஒன்றரை இலட்சம் தமிழ் மக்கள் தமது தொழில், குடியிருப்புக்களையும், விளை நிலங்களையும் விட்டு வெளியேற வேண்டி வந்தது.

சிறீலங்கா ஆயுதப்படையினர் கடந்த காலங்களில் மேற்கொண்ட பாரிய படை நடவடிக்கைகளுடன் ஒப்பிடும் இடத்து இப்படை நடவடிக்கைகளின் போது ஏற்பட்ட உயிரிழப்பானது சற்றுக் குறைவானது. இதற்காக மக்கள் குடியிருப்புக்களை சிறீலங்கா தாக்கவில்லை என்பதோ உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை என்பதோ அல்ல. மக்கள் இடம் பெயர்ந்ததே கூடிய அளவுக்கு உயிரிழப்புக்கள் ஏற்படாததற்கு காரணமாகும். எனினும் மக்கள் சொத்துடமை இழப்பும், பொருளாதார இழப்பும் மிக அதிகமானது. இந்த வகையில் ஜெயசிக்குறு படை நடவடிக்கையானது படையினருக்குப் பேரிழப்பையும் தமிழ் மக்களுக்குப் பெரும் துன்பத்தையும் விளைவித்தள்ளது தவிர வேறு எதையும் கடந்த மூன்று மாத காலத்துக்குள் ஈட்டியதாக இல்லை.

ஆனால், இவ்விழப்பீடுகளின் பின்னரும் சந்திரிகா அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டதாக தெரியவில்லை. தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களை ஒரு பொருட்டாகக் கொள்ளாத பேரினவாத அரசாங்கம் ஆயுதப் படையினரின் இழப்புக்களை மறைத்து மேலும் படை நடவடிக் கையைத் தொடரவே முயற்சிக்கின்றது. ஆனால், எதிர்காலத்திலும் இப்படை நடவடிக் கையின் இலக்கு எட்டப்படுமா இல்லையா என்பதைவிட இப்படை நடவடிக்கையானது இராணுவத்திற்கு மகிழ்சிகரமான ஒன்றாக இருக்கமாட்டாது என்று துணிந்து கூறலாம்.

நன்றி : ஈழநாதம்

# பயனற்ற கோரிக்கைகள்

'கொழும்பில் படையினர் மேற்கொள்ளும் சுற்றிவளைப்புக்கள், கைது நடவடிக்கைகளால் தமிழர்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதற்காக இத்தகைய நடவடிக்கைகளை நிறுத்தி விட முடியாது' - இவ்வாறு பாராளுமன்றத்தில் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் பேசிய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார். தமிழர்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதற்காக அனுருத்த ரத்வத்தவோ அன்றி அவர் அங்கம் வகிக்கும் ஐக்கிய முன்னணி அரசோ, தாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எதையும் கைவிடப் போவதில்லை. இதனை விளங்கிக் கொள்ள அண்மைக்கால அரசியல் வரலாறு போதுமானதாகும். சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்து எவ்வாறாயினும் தமிழர்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதற்காக தமது யுத்த நடவடிக்கைகள் எதையும் நிறுத்திக் கொண்டதில்லை. இதில் ஐக்கிய தேசியக் கட்சியோ அன்றி, இன்று ஆட்சி செய்யும் பொது ஜன ஐக்கிய முன்னணியினரோ எவருமே மாறுபட்டதான போக்கைக் கொண்டவர்களாக இல்லை. இவ்விரு பேரினவாதக் கட்சிகளின் இலட்சியக் குறிக்கோள்களும் தமிழின ஒழித்தலாகும். இதற்காக இவர்களின் நடவடிக்கைகளில் இனப் படுகொலைகள், கைதுகள், அழிப்புகள், சித்திரவதைகள் என நீண்ட பட்டியலே உண்டு. இதற்கு எதிராக தமிழ் மக்கள் மட்டுமல்ல, உலகில் பல நாடுகளில் இருந்தும் பலத்த கண்டனங்கள் எழுந்த போதும் அதனைச் சிங்கள அரசு கண்டு கொண்டதாக இல்லை. அதிலும் குறிப்பாக சந்திரிகா குமாரதுங்க அரசோ ஏனைய சிங்கள அரசுகள் இழைத்த கொடுமைகளை விட மிக மோசமான கொடுமைகளைத் தமிழ் மக்களுக்கு இழைத்துள்ளது என்றே கூறலாம். ஆதாவது பெருமினப் படுகொலைகளுக்கு வித்திட்டதோடு பெருமளவு தமிழ் மக்கள் இடம்பெயர்வுக்கும், சொத்துக்கள் அழிவுக்கும் காரணமாக இருந்துள்ளது. அத்தோடு இன்றுவரை இதே போக்கையே தொடர்ந்து மேற்கொண்டு வந்தும் உள்ளது. இந்த நிலையில், கொழும்பில் தமிழர்கள் காரணமின்றிக் கைது செய்யப்படுகிறார்கள், சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள், சிறைவைக்கப்படுகின்றார்கள் எனக் கூறுவதிலும் அதற்குப் பரிகாரம் காண மனுப்போடுவதிலும் அர்த்தம் எதுவும் இருப்பதாக இல்லை. ஆனால், அமைச்சர் ரத்வத்தவிடம் கோரிக்கை விடுத்துள்ள எவருமே காரணம் எதுவுமின்றிக் கைது செய்யப்படுபவர்களாகவே குரல் கொடுத்துள்ளனர். ஆனால், கைது செய்தமைக்கு அரசு போதுமான காரணம் ஒன்றைக் காட்டக் கூடியதாக இருந்தால் கூட கைதானவர்களுக்காக இவர்கள் குரல் கொடுக்கமாட்டார்கள். இன்னும் சற்றுத் தெளிவாகக் கூறுவதானால், சிறு ஆதாரங்களுடன் கைதானவர்கள் மீது சிறீலங்கா அரசு புரியும் மனித உரிமை மீறல்கள் பற்றிக் கூட இவர்கள் பேசியது கிடையாது. ஆனால், இவ்வாறான ஒரு கோரிக்கைக்கு அரசு ஆக்க பூர்வமான பதில் எதுவும் கொடுக்க மாட்டாது என்பது ஏற்கனவே தெரிந்த விடயம்தான். இந்த நிலையில் அமைச்சர் ரத்வத்தவிடம் கோரிக்கை விடுபவர்கள் எதன் அடிப்படையில் விடுகின்றார்கள் என்பது கேள்விக்குறியே. சில சமயம் அமைச்சர், தான் வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளும் இராணுவ முயற்சிகள், விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்கும் நோக்கம் கொண்டது எனக் கூறுவதற்கு காரணமாக உள்ளதோ என்று சந்தேகம் உள்ளது. இதே போன்ற அரசியல் இலாப நோக்கு இக்கோரிக்கையிலும் உள்ளது. ஆனால், இக்கோரிக்கைகள் எதன் அடிப்படையில் வைக்கப்படினும் இதனை முன்வைத்தவர்களுக்காக எமது அனுதாபத்தையே எம்மால் கூறமுடியும். ஏனெனில், இவர்களின் கோரிக்கை ஒருபுறம் நிராகரிக்கப்பட்டதாக உள்ள நிலையில், அவர்களின் கோரிக்கையானது தமிழ் நலனின் அடிப்படையில் முன்வைக்கப்படுவதாக இல்லை என்பதைத் தமிழ் மக்களும் புரிந்து கொண்டுள்ளனர். ஏனெனில், இவர்களும் ஒடுக்குமுறைக்கு ஏதோ ஒரு வகையில் துணை போகின்றவர்கள் என்பது தமிழ் மக்களுக்கு தெரியும். இந்த நிலையில் இவர்களது கோரிக்கைக்கு அனுதாபத்தைத் தவிர வேறு எதையும் எம்மால் கூறமுடியாது.

நன்றி : ஈழநாதம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சந்திரிகாவின் மூன்று ஆண்டு கால ஆட்சி

போரை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவேன் என்ற தேர்தல் வாக்குறுதி மூலம் 1994 ஆவணியில் ஆட்சிப் பீடமேறிய சந்திரிகாவின் மூன்றாண்டு கால ஆட்சி இம் மாதத்துடன் பூர்த்தியாகின்றது. சந்திரிகா, 'சமாதானப் போர்' என்ற போர்வையில் எத்தகைய சமாதானத்தை தமிழர்களுக்கு வழங்கியுள்ளார் என்பதைத் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வை எடுத்து நோக்கினால் நன்றாகப் புரியும்.

சொந்த தாயகத்தில் நடமாடுவதற்குக் கூட அனுமதி பெறவேண்டிய புதுமையான நடைமுறை – தங்கள் சொந்த வீடுகளில் குடியிருப்பதற்குக் கூட படையினரிடம் அனுமதி பெறவேண்டுமெனும் அடக்கு முறை – காரணமின்றி கைதுகளும் கேட்பாரின்றி கொலைகளும் கூட்டிச் செல்லப்படுபவர்கள் காணாமல் போனால் அவர்களின் நிலையை அறியச் சென்றவர்களும் கொலை செய்யப்படும் கொடூரம் – பள்ளிப் பிள்ளைகளைப் பார்த்து வைத்து பாலியல் வல்லுறவு கொள்ளும் இராணுவ மிருகத்தனங்கள் – இன்னும் வெளிவர முடியாது இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ள எத்தனையோ மனித வதைகள் – இவைதான் சந்திரிகாவின் 'சமாதானத்திற்கான போரால்' ஏற்படுத்தப்பட்டுள்ளன. இனிமேல் தமிழர்கள் மேல் குண்டுவிழ விடமாட்டேன் என்று தேர்தல் மொழி பேசியவர், தமிழர்கள் அனைவரையுமே குண்டு மழையால் குளிப்பாட்டிக் குதூகலிக்கிறார். தாம் குறிப்பிடும் இடத்தில் 'தஞ்சமடையுங்கள்' எனக்கூறி விட்டு, அதனையே இராணுவ இலக்காக்கி, மக்களை ஒட்டு மொத்தமாக அழிக்கும் புதிய கிட்லராக உருவாகியுள்ளார். நவாலி படுகொலையில் இருந்து தொடராக இன்று வரை, அவரின் கைவந்த கலைகள் தமிழ் மக்கள் மீது பரீட்சிக்கப்படுகின்றன. இவ்வாறாக சிறிலங்காவில் சந்திரிகாவின் ஆட்சி சாதனைகளை நாட்டிக் கொண்டிருக்கின்றன.

சுருக்கமாகச் சொன்னால், தகப்பனார் மொழியுரிமை பறித்தார். தாயார் தமிழர் இறைமையைப் பிடுங்கினார். மகள் தனது பெற்றோரை விஞ்சி நின்று, தமிழர்களின் வாழ்வையே அழிக்கிறார்.

ஆம்! 'சமாதானத்திற்கான போர்' எனும் பெயரில், தமிழர் தாயகத்தை அழித்து, அதன் மக்களை தனது ஆக்கிரமிப்புக்கு எதிராக எழமுடியாமல் செய்வதற்கான அப்பட்டமான ஆக்கிரமிப்புப் போர் ஒன்றில் சந்திரிகா இறங்கினார்.

உலகின் அரசியல் மூல தத்துவமான ஜனநாயகத்திற்கு அவமானகரமான உதாரணமாக இலங்கைத்தீவு காட்சியளிக்கிறது. பெரும்பான்மையினர் செய்வதை சிறுபான்மையினர் காண்பதுதான் ஜனநாயகம் என 'சிங்களம் மட்டும்' சட்டத்தை கொண்டு வந்தார் பண்டாரநாயக்கா. பிரித்தானியர் இலங்கைத் தீவை விட்டுச் செல்கையில், தமிழரும், சிங்களவரும் ஜனநாயக ஒற்றையாட்சி ஒன்றில் பங்குகொண்டு சுதந்திர ஆட்சியை அமைப்பதற்கு உருவாக்கிய சோல்பரி அரசியல் அமைப்பையே வன்முறைப்படுத்தி சிங்களத்தின் சர்வாதிகார ஆட்சியை இலங்கையில் தோற்றுவித்து அதற்கு சிறிலங்கா எனப் பெயரிட்டு தமிழர்களை நாடற்ற தேசிய இனமாக்கினார் சிறிமாவோ. சந்திரிகாவோ, தமிழர்களை இலங்கைத் தீவில் மக்களாகவே கருதாமல், அந்நிய அரசொன்றின் மக்கள் போல் கருதி அவர்கள் மீது உணவுத் தடை, மருந்துத் தடை போன்ற பல வகையான வாழ்க்கைத் தடைகளுடன் கூடிய இராணுவ ஆக்கிரமிப்பை மேற்கொண்டு அதற்கு ஜனநாயக ஆட்சி என்று பெயர் கொடுத்துள்ளார். 50,000 வாக்காளர்களைக் கொண்ட தொகுதியில் 8 வாக்குகள் அதுவும் ஆயுதமுனையில் தங்களுக்குத் தாங்களே கீறிய வாக்குகள் பெற்றவர்களை பாராளுமன்ற உறுப்பினர்களாக அறிவித்த சந்திரிகா, 'ஜனநாயகம்' என்ற சொல்லை மட்டுமல்ல – 'பிரதிநிதித்துவ முறைமை' என்ற அதன் தொழிற்பாட்டை கேலிக்கூத்தாக்கிவிட்டார்.

இவர் மட்டுமல்ல – 1948 முதல் சிங்கள ஆட்சியாளர்கள் ஜனநாயகத் தத்துவங்களை கேலிக்குள்ளாக்குவதிலே திறமைசாலிகளாக இருந்தனர். இதனாலேயே 1976இல் தந்தை செல்வநாயகம் அவர்கள், சிறிலங்கா பாராளுமன்ற முறைமையிலிருந்து விலகுவதற்கு, போதுமானதும் நியாயமானதுமான காரணங்களை எடுத்துவிளக்கி, தமிழீழத் தாயகத்தை மீளவும் தனியாட்சிக்குக் கொண்டு வருவதென முடிவெடுத்தார்.

இது குடியொப்பத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில், அதனை ஆயுத படைபலம் கொண்டு சிறிலங்கா முறியடிக்க முயன்றது. இச் சிங்கள அரச பயங்கரவாதத்தின் விளைவாக தமிழரின் ஆயுத எதிர்ப்பு தோன்றி வளர்ந்து, தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் தேசிய விடுதலை இயக்கமாக பரிணமித்து நிற்கிறது. இந்தத் தேசிய விடுதலை இயக்கத்தின் மகத்தான அர்ப்பணிப்பு


**-அக்னஸ்-**

களுடனான வெற்றிகளின் விளைவாக, அனைத்துலகம், தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதற்கான சூழல் ஒன்றைத் தோற்றுவித்தமையை அழிப்பது ஒன்றை மையமாகக் கொண்டே சந்திரிகாவின் இந்த மூன்றாண்டு கால ஆட்சியும் அமைந்ததே ஒழிய, தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நியாயபூர்வமான நடைமுறைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக, 'சமாதானத்துக்கான போர்' என்ற நியாயப் படுத்தலூடாக, தமிழ் மக்களுக்கெதிரான தனது இனஅழிப்பு நடவடிக்கைகளை – மனிதநேயத்துக்கு எதிரான குற்றங்களை – மக்கள் மீதான முற்றுகைகளை – உணவை ஆயுதமாக்கும் சர்வதேசக் குற்றச் செயல்களை – சந்திரிகா உலகுக்கு மூடி மறைக்க முயல்கிறார்.

அதேவேளை, சந்திரிகாவின் எந்த இராணுவ அடக்குமுறையையும் எதிர்க்கும் வல்லமை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உண்டு என்பதற்கான மகத்தான எடுத்துக்காட்டுக்கள் இந்த மூன்றாண்டு ஆட்சியிலும் நிறையவே உள்ளன. 3ஆம் ஈழப்போர் தொடங்கியதிலிருந்து இதுவரை 5400க்கு மேற்பட்ட சிங்களப் படையினர் பலியாகியுள்ளனர். அதிலும் குறிப்பாக, ரத்வத்த யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடியேற்றிய சிறுபிள்ளைத்தனத்தின் பின்னரே 3600 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். இதை விட, சிறிலங்கா வான்படை, கடற்படை, தரைப் படைக்கு விடுதலைப் புலிகளால் ஏற்படுத்தப்பட்ட ஆயுத இழப்புகளும் தளபாட இழப்புகளும் பல பில்லியன் டொலர்கள் பெறுமதியுள்ளன என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆக, சந்திரிகாவின் மூன்றாண்டு சாதனை என்பது ஆழம் தெரியாமல் காலை விட்ட கதையாகவே உள்ளது.

எனவே, இனி வருங் காலமாவது நல்லதாக அமைய வேண்டுமாயின், சந்திரிகா தனது ஆக்கிரமிப்பு இராணுவத்தை உடனே விலக்க வேண்டும். அதைத் தொடர்ந்து தமிழர் தலைமையான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். 'ஆக்கிரமிப்பு' என்பது போர்க்குற்றங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பெயரீடு. போரை நிறுத்துவதினால் அமைதி தோன்றுவதில்லை. மாறாக, சுதந்திரமும் பாதுகாப்பும் தோன்றுவதற்கு ஆக்கிரமிப்பு இல்லாநிலை முன்நிபந்தனையாக உள்ளது. இந்த ஆக்கிரமிப்பு இல்லாநிலைக்கு இராணுவ விலகலே முக்கியமானது. இதுவே தமிழர் பிரச்சினைக்கான தீர்வுக்கு முன்நிபந்தனையாக அமைகிறது. இது நடைபெற்றால் மட்டுமே தமிழர்களது பிரச்சினைகள் குறித்த அரசியல் தீர்வுக்கான சூழ்நிலைகள் தோன்றும்.

இதற்கு சந்திரிகா சம்மதிக்கப் போவதில்லை – காரணம் சந்திரிகாவுக்கு தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்பதில் எதுவித அக்கறையும் இல்லை. அவரது முழு அக்கறையும் சிங்கள இறைமையை எப்படி மீளவும் தமிழர் தாயகத்தில் முழு அளவில் நிலைநாட்டலாம் என்பது ஒன்றே. ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் தமிழர் இராணுவம் உள்ளவரை இது சாத்தியமாகாது. மரபுவழிப் போரிலும் கெரில்லாப் போரிலும் கைதேர்ந்த நிலையிலுள்ள தமிழர் இராணுவத்திற்கு குறித்த பிரதேசம் முக்கியமல்ல, எடுத்தகொள்கையை வெல்வதே முக்கியம். தமிழர் தாயகத்தின் சில பகுதிகள், சிங்களப் படையால் ஆக்கிரமிக்கப் பட்டால் பல பகுதிகள் விடுவிக்கப் பட்டு விடுதலைப் போர் தொடரும். இந்த உண்மை கடந்த மூன்றாண்டு காலத்தில் சிங்களத் தேசத்திற்கு தெளிவாக உணர்த்தப் பட்டுள்ளது. ஆகவே, தமிழர் இராணுவத்துடன் மோதுவதைத் தவிர்க்க சிறிலங்கா தனது படைகளை விலக்குவது ஒன்றே வழி. இதனை விடுத்து, தொடர்ந்தும் ஆக்கிரமிப்புப் போரை தொடர்வதால் மேலும் பெரு அழிவுகளையே அதன் படைகள் சந்திக்கும். இந்த உண்மையை இந்த மூன்றாண்டின் முடிவிலாவது சிங்கள மக்களும் அதன் அரசும் உணர்ந்து கொள்வார்களாயின் இலங்கைத் தீவில் விரைவில் அமைதி திரும்ப வழியுண்டு. ■



www.tamilarangam.net





சிங்கள அரசுக்கு எதிரான எமது ஆயுதப் போராட்டம் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலான நீண்ட வரலாற்றைக்கொண்டது. இந்த நீண்ட வரலாற்றுப் போக்கில் நாம் படிப்படியாகப் பெரும் வளர்ச்சி அடைந்திருக்கின்றோம். நீண்ட காலமாக கெரில்லாப் போர் முறையைக் கையாண்டு வந்த நாம் இப்போது மரபுவழி இராணுவமாக மாறிவருகின்றோம்.

இராணுவ ரீதியில் இது ஒரு பெரிய வளர்ச்சியைக் குறிக்கின்றது. இந்த வளர்ச்சி எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிதான். இந்த வளர்ச்சி எமது விடுதலைப் போராட்டத்தின் பெரும் திருப்பு முனையாகவும் அமைகின்றது. இந்த வளர்ச்சி மூலம் சிங்கள அரசு ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது, இராணுவ நடவடிக்கை மூலம் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்பதுதான் அது.

–தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்.

*1991. 09. 04* இல் பி. பி. சி. க்கு வழங்கிய நேர்காணலிலிருந்து.

# படரும் சிலந்திவலை நடுவே பாதை தேடும் பூச்சிகள்

சிலந்திகள் தம்மைச் சுற்றிப் பின்னும் பின்னல் பார்வைக்கு அழகானது. ஆனால், சிக்கலான வலைப் பின்னல். பட்டால் எழமுடியாது ஒட்டும் பின்னல். பின்னலில் சிக்கும் பூச்சிகள் சிலந்தியிடமிருந்து தப்புவது சாத்தியமே இல்லை. ஏனெனில், ஏற்கனவே மாட்டிக்கொண்ட பூச்சிகளால் மற்றைய பூச்சிகளை எச்சரிக்கவும் முடியாது. பறந்து திரியும் ஏனைய பூச்சிகளுக்கு சிலந்தி வலையின் சிக்கலும் புரியாது.

காரணம், "கண்டவர் விண்டிலர் – விண்டவர் கண்டிலர்."

ஆனால், 1997–06–10 அன்று தாண்டிக்குள விநியோகத் தளத்தில் விடுதலைப் புலிகளிடம் சிக்கிய சிறிலங்கா இராணுவத்தினரில் சிலர், அங்கு நடந்த அழித்தொழிப்பைக் கண்ட பின்னர், பொதுமக்களின் வேட்டிகளை வாங்கி அணிந்துகொண்டு, மக்களோடு மக்களாக ஓட்டமாக ஓடிவிட்டனர்.

விண்டவர்கள், "புலிகள் புயல்போல வந்தனர்" என்றும், "இயலுமானவரை தாக்கினோம், பின்னரே காட்டுக்குள் ஓடித் தப்பினோம்" என்றும் வர்ணனை செய்திருந்தனர்.

விடுதலைப் புலிகளின் போர்த்திறனை அறிந்த பின்னரும், இரண்டு வார இடைவெளியில் மறுபடியும் ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது சிறிலங்கா அரசின் அறிவீனமா? அதிகார மமதையா? அல்லது கழுத்துவரை வெள்ளம் வந்தபின் சாண் போயென்ன முழம் போயென்ன என்ற விட்டேற்றித்தனமா?

'புலிகளை எதிர்த்து வீரமாகப் போரிட்ட அரசு' என்று தனக்குத்தானே புகழாரம் சூடிக்கொள்ளும் சிறிலங்கா அரசும் அதன் பாதுகாப்புத் தரப்பின் உயர் தலைமையும் அன்று அதிர்ந்தன. விடுதலைப் புலிகள் இனி என்ன செய்வார்களோ என்பது புரியாததால், குழம்பிப்போய் சிண்டைப் பிய்த்துக்கொண்டன.

தாண்டிக்குள விநியோகத் தளம் மீதான தாக்குதலில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணி தன் பங்கை ஆற்றியது. ஜெயசிக்குறுய் நடவடிக்கையின் ஆரம்பத்திலிருந்தே மகளிர் படையணி இராணுவத்துக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கையில் பங்கெடுத்து வருகின்றது. நெடுங்கேணிப் பகுதியில் சிங்களப் படைகள் முன்னேற முயன்றபோது உண்டான கடும் மோதலில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் துணைத் தளபதி லெப். கேணல் ரத்தி அவர்கள் வீரச்சாவடைந்தார். விடுதலைப் புலிகளால் முன்னர் நடத்தப்பட்ட இரண்டு பாரிய அழித்தொழிப்புச் சமர்களாகக் கருதப்படும் முல்லைப் படைத்தள அழிப்பு, பரந்தன் – ஆனையிறவுத் தளம் மீதான தாக்குதல் என்பவற்றில் இவர் முக்கிய பங்காற்றியது குறிப்பிடத்தக்கது.

சக தோழர்களின் இழப்புகள் ஒவ்வொரு விடுதலைப் போராளிக்கும் உத்வேகத்தையன்றி சோர்வைக் கொடுக்காது. இழப்புகளால் உரமேறிப்போன மனங்களுடன் புலிவீரர்கள், ஜெயசிக்குறுய் நடவடிக்கை ஆரம்பித்து ஒரு மாதம் முடிவதற்குள் *(1997.05.13 – 1997.06.10)* சிறிலங்காப் படை நிலைகளைக் கடந்து புயலெனப் புகுந்தனர்.

நாற்புறமும் இராணுவம் சூழ்ந்துள்ள இடமொன்றின் பிரதான தளத்தை சில மணி நேரம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும், அதற்குள் பெரும் அழிவைச் செய்வதும் 'சின்னப் பொடியங்களையும் இளம் பெண்களையும் கொண்ட ஆயுதக் குழு' ஒன்றுக்கு எங்ஙனம் சாத்தியம்?

அதுதான் விடுதலைப் புலிகள்!

சிறிலங்கா அரசு ஜெயசிக்குறுய் நடவடிக்கைக்காக தன் முழுப் பலத்தையும் ஓரிடத்தில் குவித்து, நகர்த்துகின்றது. எந்த இடம் பாதுகாப்பானது என்று நினைத்து, நடவடிக்கைக்குத் தேவையான வளங்கள் வைக்கப்பட்டனவோ, அந்த இடமே புலிகளின் இலக்கானது.

புலிகளின் அன்றைய தாக்குதலில் 'ஆட்டிலறி'கள், ஆயுதக் கிடங்குகள் என்பன வெடி வைத்துக் தகர்க்கப்பட்டன. விமானப் படையினரின் எம். ஐ. 24 ரக உலங்கு வானூர்தி ஒன்று சேதமாக்கப்பட்டது. நொச்சி மோட்டைப் பாலம் தகர்க்கப்பட்டது.

தனது அணியினரை முற்றாக இழந்த படை அதிகாரி உட்பட பல படையினர் மக்களின் உடைகளை வாங்கி அணிந்து கொண்டு மக்களோடு மக்களாக வெளியேறினர்.

வவுனியாவிலிருந்து ஓமந்தை நோக்கி நகர்ந்த பெரும்படை துண்டாடப்பட்ட நிலையில், தனித்து தவித்துக் கிடந்தது.

இத் தாக்குதலில் 400 வரையான இராணுவத்தினர் பலியானதாகவும், நூற்றுக்கு மேலே காணவில்லை எனவும், 570 வரை காயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. பதுங்கு குழிகளுள் இருந்த கூலித் தமிழ்க் குழு ஒன்றின் உறுப்பினர்கள் சிலர் பலியானார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், "தாண்டிக் குளத்தில் நடந்த சண்டையின்போது திக்குத் திசை தெரியாமல் ஓடிய பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவைப்பதில் ஈடுபட்டு வந்தவேளையே அவர்கள் காணாமல் போயிருக்கலாம்" என்று அவர்களை அவர்களது வட்டாரம் தேடியதுதான்.

இத் தாக்குதல்பற்றி கொழும்புத் தமிழ் பத்திரிகை ஒன்று பின்வருமாறு எழுதியிருந்தது:

"பரந்தன் ஊடறுப்புச் சமரைவிட தாண்டிக்குளச் சமரின் உக்கிரம் பல மடங்கு அதிகம். இழப்பு வீதம் குறைவு. எனவே போர்த்தந்திர ரீதியில் புலிகளின் கெரில்லாத் திறன் வளர்முகமாக இருப்பதையும், ஒவ்வோர் சண்டை அனுபவத்திலிருந்தும் கற்றுக் கொண்டு புதிய சண்டைகளுக்கு திட்டமிடும் ஆற்றலைப் பெருக்கிக் கொள்வதையுமே காணமுடிகிறது."

இச் சண்டையில் விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் அணித் தலைவிகளுள் ஒருவரான லெப். கேணல் நந்தா, கரும்புலி மேஜர் யாழினி, கரும்புலி மேஜர் நிதன், கரும்புலி கப்டன் சாதுரியன் உட்பட என்பது போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

✡ ✡ ✡ ✡

கண்டவர்கள் விண்டு, தாண்டிக்குளத்தில் தாம், கண்ட புதினங்களையெல்லாம் சிறிலங்காப் படைத் தலைமைக்குச் சொல்லி, ஊசி நுழையாப் பாதையிலும் உட்புகுவார்கள் புலிகள் என்பதை இராணுவத் தலைமை ஐயம் திரிபற உணர்ந்த பின்னரும் இருவார இடைவெளியில் ஜெயசிக்குறுய் தொடரப்பட்டது.

1997–06–23 அன்று மறுபடியும் புளியங்குளம் நோக்கி முன்னேற முயன்ற ஜெயசிக்குறுய் நடவடிக்கைப் படையினரை எதிர்கொண்டனர் பெண் புலிகள்.

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி விதுசா அவர்களின் வழி நடத்தலில், பெண் புலிகள் நடாத்திய உக்கிர தாக்குதலினால் அரச படையினரின் ஒரு டாங்கி முற்றாக அழிந்தது. இரண்டு டாங்கிகள் பலத்த சேதமுற்றன.

**விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி விதுஷா அவர்களின் வழி நடத்தலில், பெண் புலிகள் நடாத்திய உக்கிர தாக்குதலினால் அரச படையினரின் ஒரு டாங்கி, முற்றாக அழிந்தது. இரண்டு டாங்கிகள் பலத்த சேதமுற்றன.**

**மறுநாள் இரவு பெரியமடுப் பகுதியில் நடாத்தப்படவிருந்த தாக்குதலுக்கு முதல் நாளே கட்டியம் கூறுவதுபோல அமைந்தது பெண் புலிகளின் தாக்குதல்.**



*தலைவருடன் கரும்புலி மேஜர் யாழினி*

தொடர்ச்சி 9 ம் பக்கம்......

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# படரும் சிலந்திவலை நடுவே......

மறுநாள் இரவு பெரியமடுப் பகுதியில் நடாத்தப்படவிருந்த தாக்குதலுக்கு முதல் நாளே கட்டியம் கூறுவதுபோல அமைந்தது பெண்புலிகளின் தாக்குதல்.

1997.06.24 அன்று ஜெயசிக்குறுய் படையணியினரின் பெரியமடுப் பகுதியில் நிலைப்படுத்தப்பட்டிருந்த 'ஆட்டிலறி' மற்றும் 'மோட்டார்' நிலைகள் மீதும் அதனைச் சூழவுள்ள பாதுகாப்பு அரண்கள் மீதும் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட தாக்குதலில் இருநூறுக்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். முன்னூறுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

ஜெயசிக்குறுய் நடவடிக்கையில் தரைப்படையை வழி நடாத்தும் கட்டளை அதிகாரியான கேணல் நிசாம்டேன் கொல்லப்பட்டார்.

படைத் தலைமை சற்றும் எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத இடத்தில் மீண்டும் ஒரு ஊடறுப்புத் தாக்குதல்; விடுதலைப் புலிகள் வவுனியா நகரப் பகுதிக்குள் ஊடுருவிஇருப்பதாகவும், அவர்கள் அப் பகுதிக்குள் பெருந்தாக்குதல்களை மேற்கொள்ளலாமென்றும் கிடைத்த புலனாய்வுத் தகவல்களை அடுத்து, படையினர் காவல் உலாக்களையும் கண்காணிப்பையும் தீவிரப்படுத்திய பின்னர் நிகழ்ந்த ஊடறுப்புத் தாக்குதல்.

பார்த்துக் கொண்டிருக்க கண் முன்னே சிங்களப் படையினரின் 120 எம். எம். 'ஆட்டிலறிப் பீரங்கி ஒன்றும் அதன் முந்நூறு எறிகணைகளும் ஐந்து ஆட்டிலறிப் பீரங்கிகளின் அடிப் பாகத்தினோடு சேர்ந்த காவுவண்டிகளும் புலிவீரர்களின் கைகளுக்கு மாறின.

இத் தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்டது பெரிய சேதம் என்றும் இரவு 10. 30 மணிக்குத் தொடங்கிய தாக்குதலில் பிளவுபட்டிருந்த இராணுவத்தினர், மறுநாள் மாலை 3. 30 மணியளவிலேயே மீண்டும் சேர்ந்து கொண்டனர் என்றும் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் அவர்கள் தெரிவித்தார்.

இம் மோதலில் லெப். கேணல் தனம், மேஜர் துளசி, மேஜர் ரதி, மேஜர் இந்திரா, மேஜர் கோகுலநாதன், மேஜர் திருமகன், மேஜர் வரதராஜ் உட்பட தொண்ணூற்று ஒரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் தொடர் அதிரடிகளை முறியடிப்பது எவ்வாறு என்று இராணுவ உயர்மட்டக் குழு இப்போது ஆராயத் தொடங்கியுள்ளது.

> விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் தொடர் அதிரடிகளை முறியடிப்பது எவ்வாறு என்று இராணுவ உயர்மட்டக் குழு இப்போது ஆராயத் தொடங்கி உள்ளது.
>
> தமிழர் தாயகப் பகுதிக்குள் தன் படையினரை அனுப்பிவிட்டு, புலிகளின் தாக்குதலை எவ்வாறு முறியடிப்பது என்று யோசிப்பது காலம் கடந்த ஞானம் அன்றி வேறென்ன?

தமிழர் தாயகப் பகுதிக்குள் தன் படையினரை அனுப்பிவிட்டு, புலிகளின் தாக்குதலை எவ்வாறு முறியடிப்பது என்று யோசிப்பது, காலம் கடந்த ஞானம் அன்றி வேறென்ன?

எனினும்,

"நடவடிக்கை நிறுத்தப்படாது. தொடரும்" என்கிறது படைத் தலைமை.

அத்துடன், இதுவரை வழமையாக 'போர்முனை', 'முன்னணிப் பாதுகாப்பு நிலை', 'பதுங்குகுழி' போன்ற சொற்களைப் பாவித்து வந்த சிறிலங்காவின் முப்படையினரும் கடந்த சில வாரங்களாக, 'பிரதான விநியோகப் பாதை' குறித்தே பேசி வந்தனர். விடுதலைப் புலிகளின் தொடர் அதிரடிகளால் பிரதான விநியோகப் பாதை பற்றிய பேச்சு இப்போது மந்தம் கண்டுள்ளதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஜெயசிக்குறுய் என்பதன் பொருள் என்ன?

வெற்றி நிச்சயம்!

அப்படியா? யாருக்கு?

இது சிறிலங்காவின் படைபலத்துக்கும் விடுதலைப் புலிகளின் மனோபலத்துக்கும் இடையிலான போர்.

இது அதிகார வெறி கொண்ட பேரினவாதத் தலைமைக்கும் விடிவை வேண்டி நிற்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் தலைமைக்கும் இடையிலான போர்.

இதில் வெல்லப் போவது யார் என்பதை அறிய எந்த ஆரூடமும் தேவையில்லை.

"பிரதான பாதையை இராணுவம் பிடிக்கலாம் – பிடிக்காமல் விடலாம். பிடித்த பாதையைத் தக்க வைப்பது சாத்தியமே அல்ல. வேண்டுமானால் எதிர்காலத்தில் இந்த இராணுவ நடவடிக்கையை "தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவம் செய்த 80 கி. மீ. நடைப்பயணம் என்று சொல்லாம்."

ஜெயசிக்குறுய் நடவடிக்கையின் நோக்கம் பற்றி, பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து ஒலிபரப்பாகும் வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப் பணிப் பொறுப்பாளர் அருட்திரு ம. ஜெகத் கஸ்பர் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆமாம்.

80 கி. மீ. நடைப் பயணத்தால்

**பஞ்சகல்யாணி**

சிறிலங்கா அரசு சாதிக்க முயல்வது என்ன?

?......... ?....... ?........

பூச்சிகள் தாமாகவே சிலந்தி வலைக்குள் போய் விழுந்த பின்னர் ஏன் இதற்குள் வந்தோம என்று யோசிப்பதில் பயனில்லை.

# பரீட்சித்த ஆலோசனை

இராணுவத்தினருக்கான ஆட்சேர்ப்பில் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ள சந்திரிகா அரசுக்கு 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை – பாதுகாப்புச் செய்தியாளர் தனது ஆலோசனை ஒன்றை விளக்கியுள்ளார். அவர் சிறீலங்கா ஆயுதப்படைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு மிகக் கவர்ச்சிகர விளம்பரங்களைச் செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளதோடு, அமெரிக்கா போன்ற நாடுகள் இத்தகைய ஆட்சேர்ப்புக்குப் பெரும் நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதாகக் கூறியதோடு, படையினரின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் ஆலோசனை கூறியுள்ளார். சிறீலங்கா ஆயுதப் படைக்கு ஆட்சேர்ப்பதற்கென சந்திரிகா அரசினால் மட்டுமல்ல அதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசினால் கூடப் பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. இதற்கெனப் பெரும் எடுப்பில் பிரச்சாரங்களும் மேற் கொள்ளப்பட்டன. ஒருபுறம் ஆயுதப் படையினரின் வெற்றிகள், சாதனை குறித்து உண்மைக்கு மாறாகப் பிரச்சாரம் பெரும் எடுப்பில் வானொலியிலும், தொலைக் காட்சியிலும் செய்யப் பட்டன. மேலும், மிகவும் கவர்ச்சிகரமாகவும் இவை அமைக்கப்பட்டு இருந்தன. அத்தோடு அவற்றின் அடிப் படையாகப் பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்குப் புத்துணர்வு ஊட்டி இளைஞர்களை இராணுவத்தில் சேர்க்க முயற்சிகளும் மேற் கொள்ளப்பட்டது. மறுபுறமாக ஆயுதப்படையில் இணைவோருக்கு சலுகைகள் பெருமளவில் வழங்கப்பட்டன. இதில் ஆயுதப்படைக்கு, குறிப்பாக இராணுவத்தில் சேர்வதற்கான பள்ளி மற்றும் உடல் கட்டுப்பாடுகள் குறைக் கப்பட்டது எனக் கூறலாம். அதாவது, ஏற்கனவே எட்டாம் வகுப்பு என இருந்த பள்ளித் தகைமை ஐந்தாம் வகுப்பு எனக் குறைக் கப்பட்டது. இது கையொப்பம் இடத் தெரிந்தால் போதும் என்ற தகைமையாகவே கொள்ள முடியும். இது போன்று உடல்வளத் தகைமையில் உயரம் 5அடி 3அங்குலம் ஆகக் குறைக்கப்பட்டது. இது சிறீலங்கா போன்ற நாடுகளின் சராசரி உயரத்தை விடக் குறைவாக உள்ளது. உடல் வளர்ச்சி குன்றியவர்கள் கூட இவ்வுயரத்தை உடையவர்களாக உள்ளனர். இந்த வகையில் சிறீலங்கா அரசு ஆட்சேர்ப் புக்காக கடந்த காலத்தில் அறிவித்த சலுகை அறிவுப் புக்கள் வெளிப்படையாக ஆயுதப்படையினர் தகைமை, தகுதி இல்லாதவர்களாக உள்ளனர் எனத் தெரிவித்தது. இதைத் தவிர, சிறீலங்கா அரசு ஆயுதப்படையினருக்கு வழங்கும் சம்பள, சலுகைகள் சிறீலங்கா அரசில் உயர்பதவி வகுப்பவர்களுக்கு சமமான அளவிலேயே உள்ளது எனக் குறிப்பிடலாம். சாதாரணமான ஒரு பட்டதாரியின் அரச ஊதியத்தை விட அதிகரித்த மட்டத்திலேயே ஒரு சிப்பாயின் சம்பளம் உள்ளது. இதைத் தவிர ஆயுதப் படையினருக்கென பல்வேறு சலுகைகள் குறிப்பாகப் பாடசாலை அனுமதிகள், மருத்துவ வசதி, வீட்டுவசதி என்பனவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இவ்வாறான சம்பள, சலுகை அறிவிப்புக்கள், விளம்பரங்கள் என்பன மூலம் கூட, சிறீலங்கா படையினர் ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் தேவையான அளவைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. இவ்வாறான நிலையில் பாதுகாப்புச் செய்தியாளரின் ஆலோசனையானது எத்தனை தூரம் சிறீலங்கா அரசுக்கு உதவக்கூடும் என்பது கேள்விக்குரியதே. இவற்றோடு அமெரிக்கா போன்று படையினருக்கு சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்பது எவ்வளவு சாத்தியப்பாடானது என்பது கேள்விக்குறியே. ஏனெனில், தற்பொழுது உயர்ந்த மட்டத்தில் இருக்கும் இராணுவத்தினரின் சம்பளங்களை அதிகரிப்பது சிங்களப் பொருளாதாரத்தைப் பாதிக்கும் ஒரு விடயம். ஏற்கனவே தேசிய வருமானத்தில் 7.5 சத விகிதத்தை யுத்தச் செல வீட்டுக்கு ஒதுக்கீடு செய்து விட்டு அரசாங்கம் பெரும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றது. இந்த நிலையில் மேலும் சம்பளத்தை எவ்வாறு அதிகரிக்க முடியும்? அதற்காக நிதித் தேவையை எவ்வாறு ஈடுசெய்ய முடியும்? ஆனால், அவ்வாறு தான் சம்பளத்தையோ, சலுகைகளையோ உயர்த்தினால் கூட ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியுமா? என்பது கேள்விக்குரியதொன்றாகும். ஏனெனில், இவ் யுத்தத்தில் சிறீலங்கா அரசு வெற்றி கொள்ளமுடியாது என்பதைச் சிங்கள சமூகம் பெரும்பாலும் உணர்ந்து கொண்டுள்ளது என்றே கூறலாம். இந்த நிலையில், பணத்திற்காக உயிரை விடத் தயாரானவர்களைத் தவிர, வேறு எவருமே ஆயுதப்படையில் சேர்ந்து கொள்ளத் தயாராக இருப்பார்களோ என்பது கேள்விக் குறியே?

நன்றி: ஈழநாதம்

**வாசகர் கவனத்திற்கு !**

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை (தலைப்புடன்) வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை **26- 09 - 1997** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**
**Eelam House, 202Long Lane,**
**LondonSE1 4QB.**



www.tamilarangam.net





# புனர்வாழ்வுப் பணியில் பன்னிரண்டு ஆண்டுகள்

**தமிழர் புனர்வாழ்வுக்கழகம்** ஆரம்பித்துப் பன்னிரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள இந்த வேளையில் இக்கழகத்தின் பரிணாம வளர்ச்சி யையும், சேவையையும் இதன் ஆரம்ப கர்த்தா வையும் ஒரு கணம் எண்ணிப்பார்க்கின்றோம்.

ஆம். தமிழீழ விடுதலை என்னும் புனித யுத்தத்தில் விடுதலை கிட்டும் வரை எமது மக்கள் தளர்ச்சியடையாது போரைக் கொண்டு நடாத்தி வெற்றி காணவேண்டும் என்ற இலட்சிய வேட்கையோடு எமது தேசியத் தலைவர் வே.பிரபாகரனால் 1985ம் ஆண்டு இக்கழகம் தீர்க்கதரிசனத்தோடு உருவாக்கப்பட்டது.

இன்று ஒரு அரசாங்கத்தின் புனர்வாழ்வு அமைச்சுச் செய்ய வேண்டிய பணியை, அதனை விடப் பல மடங்கு விரிவாகவும், வேகமாகவும் நேரடிக்கண்காணிப்புடனும் புனர்வாழ்வுக்கழகம் திறம்பட நடாத்துவதோடு கழகத்தில் பணிபுரியும் பிரதிநிதிகள், ஊழியர்கள், தொண்டர்கள் யாவரும் தமிழீழத்தாயகம் நோக்கிய தாயதேசியப்பற்றோடு கிஞ்சிற்றும் ஊழலின்றி,மோசடியின்றிச் செயற்பட்டு வருவதை எண்ணிப் பெருமிதமடைகின்றோம்.

1985ம் ஆண்டு ஆடி மாதமளவில் ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் அகதிகளாய் அல்லலுற்றுப் பாதுகாப்புத் தேடித் தமிழகக் கரைகளில் ஒதுங்கிய போது இந்திய மத்திய அரசும் மாநில அரசும் இவர்களை ஏற்றுச் சிறு சிறு மண்டபங்களில் அமர்த்திப் பராமரித்தன. இச்சிறு மண்டபங்கள் புயல் அடிக்கும் வேளையில் மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்காக International Monetary Fund(I.M.F) இனால் இந்திய அரசுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டது இங்கு குறிப்பிடத் தக்கது. இந்த மண்டபத்தில் ஒவ்வொரு குடும்பத் திற்கும் சுமார் 6அடி 4அடி இடத்தில் சுற்றி வர மறைப்புக்கட்டி அங்கு வாழ்க்கை நடாத்த ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது.

முதலில் தஞ்சாவூரிலும் பின்னர் மதுரை, செங்கல்பட்டு ஆகிய இடங்களிலும் மொத்தமாக 120 முகாம்கள் அமைக்கப்பட்டு அங்கு எமது மக்கள் பராமரிக்கப்பட்டனர். மிகமிகக்குறைந்தளவு உணவு, உடை, மருத்துவம், சுகாதாரம் போன்ற வசதிகளோடு இவர்கள் பராமரிக்கப்பட்டனர்.

முதலில் கழகத்தின் தலைமைச்செயலகம் சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டுப்பின்னர் கிளைகள் மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் நிறுவப் பட்டன. மூன்று வைத்தியர்களும் பல தொண்டர் களும் இணைந்து தம்மால் இயன்ற சேவையை மக்களுக்கு வழங்கினர். அத்துடன் அடிப்படை சுகாதார வசதிகளை வழங்கும் நோக்குடன் தொண்டர்களைப் பயிற்றுவித்து அவர்கள் மூலம் சுகாதார வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டது.

முகாம்கள் நிரம்பி இடநெருக்கடி கூடிய வேளையில் கழகம் முகாம்களுக்கு வெளியே சிறிய குடிசைகள் அமைத்து அவர்களுக்குச் சற்று இடவசதி செய்து கொடுத்தது. அத்தோடு கழகம் மாணவர்களின் கல்வியைக் கருத்திற் கொண்டு அவர்களுக்கேற்ற கல்வித் திட்டத்தை அறிமுகப் படுத்தியது. மாணவர்களை ஊக்குவிக்கு முகமாக புத்தகம், கொப்பி, பேனா முதலிய வற்றை வாங்கிக் கொடுத்தது. தொண்டர்க ளுக்கும் ஆசிரியப்பயிற்சி அளித்து அவர்களையும் ஆசிரியராக நியமித்து கல்வி வசதி பெறக் கழகம் ஊக்குவித்தது.

தமிழகத்தில் மட்டுமன்றி வெளிநாடுகளி லும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் கிளைகளை ஆரம்பிக்குமுகமாக டாக்டர் ஜெயகுலராஜா அவர்கள் பல கிளைகளை வெளிநாடுகளில் ஆரம்பித்து வைத்தார்.

1987 இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்டதன் பின் அகதிகள் இலங்கைக்குப் பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்பட்டனர். இக்காலகட்டத்தில் கழகம் தனது பணிகளைச் சற்று மந்த நிலைக்குக் கொண்டு வந்தது. அதன் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளை இந்தியா உத்தியோகபூர்வமாகத் தடைசெய்தது. இதனால் கழகத்தின் தலைமைச் செயலகத்தை தமிழீழத் திற்கு மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. கே.கே.எஸ் வீதியில் கழகம் வேகமுடன் தனது பணிகளைத் தொடர்ந்தது.

தமிழீழம் கேட்ட தலைவர்கள், இதர இயக்கங்கள் அனைத்தும் தமிழ் அகதிகள் நிலை யில் பாராமுகம் காட்டியபோது தமிழர் புனர்வாழ் வுக்கழகம் தம் சொந்த மக்களை அரவணைத்து ஆறுதல் கூறிப் பாதுகாத்து எம்மக்களைப் பராமரித்தது. 1988களில் தென்தமிழீழ மக்கள் அகதிகளாக்கப்பட்டு வன்னிக்கும் யாழ்ப்பாணத் திற்கும் வந்தபோது கழகம் விரிவாகச் செயற்பட்டு அவர்களுக்குப் போதிய ஆதரவளித்தது.

**எறிகணைத் தாக்குதலாலும் விமானத் தாக்குதலாலும் தம்முயிர்களை இழக்கின்ற மக்களின் உடல்களை அவர்களின் உற்றார் உறவினர்களிடம் ஒப்படைப்பது மட்டுமன்றிக் காயமுறும் மக்களை உடனடியாக வைத்திய சாலைக்குக் கொண்டு செல்வது முதல் கொண்டு போர்ச்சூழலில் அவர்களைப் பாது காத்தும் அவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, உறையுள் அடிப்படை மருத்துவம் போன்ற இன்னோரன்ன தேவைகளைப் பூர்த்தி செய்தும் அதன் பின்னர் கல்வி, வேலை வாய்ப்பு எனப் பல்வேறு வழிகளில் ஒரு அரசாங்கம் போலத் தனது பணிகளைச் செவ்வனே செய்தும் கழகம் உண்மையிலேயே எம்மக்க ளுக்காகமுழுமையாக உழைத்தது**

அரச சார்பற்ற அமைப்புக்கள் கூடப் போர் ஓய்ந்த பின்னரே அவ்விடங்களுக்குச் சென்று தமது பணிகளைச் செய்ய முடியுமே தவிர போர் நடக்கின்ற வேளையில் தம் உயிர்களைத் துச்சமென மதித்து எம்மக்களின் உயிர் உடமை– களைப் பாதுகாத்து அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்களால் தான் முடிந்தது என்பதை நாம் மறந்து விடலாகாது.

UNHCR, Redcross, Oxfam மற்றும் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் புனர்வாழ்வுக்க ழகத்தினூடு தான் தமது பணிகளை மேற்கொண்டு வருகின்றன என்பது உலகறிந்த விடயம். 1995இல் யாழ்குடா நாடே தன்னிலை விட்டு இடம் பெயர்ந்த போது ஒரு கையால் ஓராயிரம் பேருக்கு வைத்தியம் பார்த்தது போல் கழகம் இராப்பகல் பாராது தொண்டர்களையும் மக்களையும் தனது அணிதிரட்டி அவசரகால நிலையில் நின்று துன்பத்தில் அல்லலுற்ற எம் மக்களுக்கு ஆற்றிய பணி எழுத்திலடங்காத தாகும்.

**எனவே அவற்றை நாம் இப்பன்னிரண் டாவது ஆண்டில் நினைவு கூருவது தற்புகழ்ச்சிக்கோ அல்லது பெருமை சாற்றவோ அல்ல. ஒரு கை தட்டி ஓசை எழும்பப் போவதில்லை. பல கைகள் தட்டினால் ஓசை பலமாக எழும்பும். அது போல் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் பெருமளவில் கரம் கொடுத்தால் கழகத் தின பணி இன்னமும் சிறப்பாக நடைபெறும். இது உங்கள் கழகம். நீங்கள் ஆற்றும் பணி உங்கள் இனத்தின் விடிவிற்கே. ஆம். எம் இனிய தமிழ் இனத்தின் விடுதலைக்கே. இந்த நேரத்தில் நாம் கொடுக்கும் கரங்கள் எமது விடுதலைப் போராட்டத்தை மழுங்க டிக்காது தாமதப்படுத்தாது வேகப்படுத்தும். எம்மக்கள பசியாலும் துன்பத்தாலும் நோயா லும் வேதனைப் பட்டுக் கொண்டிருக்க விடு தலைப்போரை வேகப்படுத்தல் இயலாத காரியம்.**

புலம் பெயர்ந்து வாழும் எமது மக்கள் தம் கடமைகளை உணர்ந்து தாமாகவே எமக்கு உதவி முன்வரல் வேண்டும். விடுதலைப் போராட்டத்தில் இன்னும் பல மைல் கற்களை நாம் தாண்ட வேண்டி உள்ளது. இப்போராட் டத்தில் எம்மக்கள் களைத்து விடாமல் பார்க்க வேண்டியது எம் தலையாய கடன். தமிழீழத் தேசியத்துக்குத் துணைபோகின்ற தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துடன் இணைந்து எமது கரங்களைப் பலப்படுத்தி எமது செயற்பாடுகளை விரிவாக்கி வேகமாக்கக் கரம் தருமாறு கடல் கடந்து வாழும் தமிழ் மக்களை உரிமையுடனும் அன்புடனும் அழைக்கின்றோம்.

## எம்மவர்களின் இன்னல் தீர்ப்பது எம் கடன் அன்றோ


அன்பார்ந்த தமிழ் மக்களே!

சொந்த மண்ணில் எம் மக்களின் நொந்த நிலையை எண்ணிப் பாருங்கள். காலத்தின் தேவையை அறிந்து இன்று நாம் அவர்களுக்கு உதவத்தவறின், எம இனத்திற்குப் பெரும் துரோகம் இழைத்தவர்கள் ஆவோம். சிறு துளி பெரு வெள்ளம். இன்னலுறும் எம் மக்களுக்கு நாம் அளிக்கும் சிறிய அளவு பண அவர்களின் நல்வாழ்வுக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கும். எனவே தாமதியாது உதவுங்கள்.

மேலதிக தொடர்புகளுக்கு
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்
(பிரித்தானிய கிளை)
Registered Charity No: 1010029
79 Hoe Street, Walthamstow,
London E17 4SA
தொலைபேசி இல: 0181 - 520 5876


### தமிழர் புனர்வாழ்வுக்கழகங்களின் சர்வதேச அமைப்புக்களின் தொலைபேசி இலக்கங்கள்

| | |
|---|---|
| **TRO** Canada: | Ph: (1416)463 7647 |
| **TRO** Denmark: | Ph: (4520)23 88 97 |
| **TRO** France: | Ph((331 46) 489 850 |
| **TRO** Germany: | Ph: (4921) 665 8508 |
| **TRO** U.K.: | Ph: (44181) 520 5876 |
| **TRO** Italy: | Ph; (39 91) 611 3179 |
| **TRO** Malaysia: | Ph: 603 255 2472 |
| **TRO** Netherlanl | Ph: 31 72 644 442 |
| **TRO** New Zealand ; | Ph: (649) 537 0258 |
| **TRO** Norway: | Ph: (47 22) 646 592 |
| **TRO** South Africa: | Ph: (27 471) 310 123 |
| **TRO** Sweden: | Ph: (4686) 870 649 |
| **TRO** Switzerland: | Ph: (41 41) 260 8398 |
| **TRO** U.S.A. | Ph: (0 1 301)729 2722 |
| **TRO** Australia: | Ph:Fax:(613) 9800 3899 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறுகதை




அந்த 'சாளி' மோட்டார் சைக்கிள் 'டொக்டரின்' பாரத்தைத் தாங்கமாட்டாமல் முக்கி முனகிக்கொண்டு வந்தது. குண்டும் குழியுமாக இருந்த வீதி அவரது உடம்பைப் படாதபாடு படுத்தியது. திடீரெனக் குறுக்கே பாய்ந்த சிறுவர் கூட்டம் அவரைத் திடுக்குற வைத்தது. வாய்விட்டுச் சொல்லிக் கொண்டார் "சனியனுகள்" அந்த இடத்தில் வீதியில் இரண்டு பக்கங்களிலும் குடிபெயர்ந்தோர் குடில்கள் நிறையவே இருந்தன. அந்த இடத்தின் சூழல் அவருக்கு எள்ளவும் பிடிக்கவில்லை. அடிக்கடி யாழ்ப்பாண வாழ்க்கையை நினைவுபடுத்திக் கொள்வார்...பாதை இப்போது சீராக இருந்ததால் வேகத்தைத் துரிதப்படுத்தினார். தூரத்தே வைத்திய சாலையும் மரங்களுக்குக் கீழ் மக்கள் கூட்டமும் தெரிந்தது.

'டொக்டர்' தன்னுடைய கைக்கடி காரத்தைப் பார்த்துக் கொண்டார். நேரம் மதியத்தைத் தாண்டி 12.30 எனக் காட்டியது. 'டொக்டரின்' மனநிலையைப் புரிந்துகொண்ட தாதி தள்ளுக்கதவைத் தள்ளிக்கொண்டு நோயாளர் காத்திருக்கும் பகுதியை எட்டிப் பார்த்தாள். மூன்று பெண்களும் ஒரு ஆணுமாக மொத்தம் நான்கு பேர் இருந்தார்கள்.

"சேர்.... இன்னும் நாலு பேர் இருக்கினம்" தாதியின் சொல் 'டொக்டரை' ஆறுதல் படுத்தியிருக்க வேண்டும். அமைதியாக, "வரச்சொல்லு" என்றார். வயது முதிர்ந்த மூதாட்டி ஒருத்தி இருமிக்கொண்டே 'டொக்டரை' அணுகினாள். மூதாட்டி விளங்காத குரலில் சொன்னதையெல்லாம் பொறுமையுடன் கேட்டு விளங்கிக் கொண்ட 'டொக்டர்' அவளுக்குத் தேவையான மருந்துகளை எழுதிவிட்டு அடுத்த ஆளுக்காக நிமிர்ந்தார். அவர் கண்களில் சிறுமின்னல்.

என்றோ... எங்கையோ பார்த்த முகம்.. இது! ...இது.... அவர் மூளைக்குள் ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருந்தார். நோயாளி 'டொக்டருக்கு' முன்னால் கிடந்த கதிரையில் இருந்து மூச்சினைச் சத்தமாக இழுத்து இழுத்து விட்டுக் கொண்டிருந்தார்.

"உங்களுக்கு என்ன செய்யுது பெரியவர்...." 'டொக்டர்' வழக்கமான கேள்வியைக் கேட்டார்.

"ஐயா, மூச்சுவிட துண்டா முடியுதில்லை. கைகால் குத்துழைவு அதோட இழுப்பு" எவ்வளவோ சிரமத்துக்கு மத்தியில் அந்த வயோதிபர் சொல்லி முடித்தார்.

"உங்களுக்கு வயது என்ன?" 'டொக்டர்' அடுத்த கேள்வியைப் போட்டார், நோயாளியின் முகத்தை ஆராய்ந்தபடியே.

"அம்பத்திரண்டு ஐயா."

'டொக்டர்' துணுக்குற்றார். தன்னுடைய வயதா இவருக்கும். எழுபதுக்கு மேல் இருக்கும்போல் ஒரு தோற்றம். தெரிந்த முகம், சம வயது... 'டொக்டரின்' முகத்தில் மகிழ்ச்சியின் ரேகை. அடுத்த கேள்வியைக் கேட்டால் விஷயம் முடிகிறது.

"உங்கட பெயர் என்ன?" 'டொக்டர்' கேட்டேவிட்டார்.

"நாகராசா" – குரல் தடுமாற நோயாளி சொன்னார். 'டொக்டரின்' கண்கள் லேசாகக் கலங்க... முகத்தில் பிரகாசம் தெரிந்தது.

"நாகராசா! நீர்..... கீரிமலைதானே...." சந்தேகத்தை முற்றாகத் தீர்த்துவிட 'டொக்டர்' கேட்டார்.

"பூர்வீகம் கீரிமலைதான். அதுக்குப் பிறகு எத்தனையோ இடம் மாறி.... இப்ப வன்னேரிக் குளத்தில் இருக்கிறன்."

நாகராசா என்கிற அந்த நோயாளி, எத்தனையோ முனகல் அனுங்கலுக் கிடையில் ஒருவாறு சொல்லி முடித்துவிட்டு 'டொக்டரின்' முகத்தைக் கூர்ந்து அவதானித்தார். கண்களை இடுக்கி சிறிதாக்கி கூர்ந்து பார்த்தார். முகத்தில் ஆற்றாமை தெரிந்தது.

"நாகராசா! உற்றுப் பார்க்கிறாய்.... என்னை விளங்குறதே?" 'டொக்டர்' புன்சிரிப்புடன் கேட்டார்.

" இல்லை ஐயா! விளங்கேல்ல.....ஐயாவும் கீரிமலையோ?"– நாகராசா.... மிகவும் யோசிக்க முனைந்தார்....

"நாகராசா! நீ எப்ப இங்கால வந்தனி?"

"எல்லாச் சனமும் வரேக்க நானும் வந்தனான்."

"இங்கால உன்னால சீவிக்க முடியுதே? அங்கால இருந்திருக்கிலாந்தானே?"

நாகராசாவிடமிருந்து ஒரு சத்தமில்லாத வரண்ட சிரிப்பு வந்தது.

"ஐயா, அவங்களோட என்னெண்டு வாழுறது. எங்கட சனத்தை – எங்கட பிள்ளையளை விட்டிர்றது...?"

'டொக்டரின்' நெஞ்சில் ஏதோ இடித்ததுபோல் இருந்தது. இடமாற்ற உத்தரவால் வந்து இங்கு மாட்டுப்பட்டுப் போனோமே என்று இதுவரை எண்ணியி ருந்தவரை நாகராசாவின் பதில் சிந்திக்க வைத்தது.

தள்ளுக்கதவுக்கப்பால் இருமல் பலமாகக் கேட்டது. தாதியின் பார்வையில் அவசரம் தெரிந்தது.

'டொக்டர்' நாகராசாவைத் தீவிரமாகச் சோதித்தார். கண்களை விழிக்கச் சொன்னார். நாக்கை நீட்டச் சொன்னார். மூச்சை பெரிதாக இழுத்துவிடச் சொன்னார். நாகராசா சிரமப்பட்டு எல்லாவற்றையும் செய்து காட்டினார். ஒரு சீட்டில் மருந்து விபரத்தை எழுதி... "நாகராசா! மருந்தை எடுத்துப்போட்டு, அடுத்த அறையில இருக்கிற வாங்கில வந்து இரு. நான் இவையளைப் பார்த்து முடிச்சுப்போட்டு வாறன்... என்னைச் சந்திக்காமல் போகாத."




நாகராசா தலையாட்டிவிட்டு எழுந்து கொண்டார். 'டொக்டரின்' முகத்தை ஏற இறங்கப் பார்த்தார். அவரின் வரண்ட கண்களில் எங்கோ ஒரு கசிவு. வேகமாக ஆடியபடி மருந்துச் சிட்டையுடன் வெளியே வந்தார்.

அடுத்து வந்த நோயாளிகள் பக்கம் கவனத்தைத் திருப்பிய 'டொக்டர்' நாகராசா பற்றிய நிகழ்வுகளை தற்காலிகமாக இடைநிறுத்தினார். வந்திருந்த நோயாளிகளை பார்வையிட்ட பின் நோயாளிகள் தங்கும் பகுதி வெறுமையாகிப் போனது கண்டு வெளியே வந்தார். அவர் சொன்ன இடத்தில்.... நாகராசாவைக் காணவில்லை. மருந்து கொடுக்கும் பகுதிக்கு வந்து பார்த்தார். அங்கும் இல்லை.

மருந்து கலந்துகொடுக்கும் வைத்திலி ங்கத்திடம்... நாகராசா பற்றிய விவரத்தைச் சொல்லிக் கேட்டார். வைத்திலிங்கம் மருந்து வழங்கிய சிட்டைகளை ஆராய்ந்து பார்த்துவிட்டு,

"சேர்! அவர் மருந்து எடுத்துக்கொண்டு போட்டார்" என்று சொன்னபோது டொக்டரின் முகம் வாடிப்போனது.

"நேர்ஸ்.... நாகராசாவெண்டு ஒருத்தர் அப்போது வந்தார்....."

"அவரை அதில இருக்கச் சொன்னனீங்களல்லோ" ஆவலோடு தாதி அந்த அறையைப் பார்த்தாள். அது வெறுமையாக இருந்தது.

"ஏன் சேர் அந்தக் கிழவன் உங்களுக்குத் தெரிஞ்ச வரோ?" தாதியின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் டொக்டர் நடந்துபோய்க் கொண்டிருந்தார். அவரது சிந்தனை சிறு பராயத்தை வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அந்த அமெரிக்கன் மிசன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை இயங்கினாலும் கலவன் பாடசாலையாக சிறுவர் – சிறுமிகளால் நிரம்பி வழிந்தது. ஏழைப் பிள்ளைகள் பெரும்பாலும் படித்தாலும் ஒரு சில செல்வந்த வீட்டுப் பிள்ளைகளும் அங்கு படிக்கத்தான் செய்தார்கள். ஐந்தாம் வகுப்பு 'பாஸ்' செய்துவிட்டால் ஊர் கடந்து போய் பெரிய பள்ளிக்கூடத்தில் படிக்க வேண்டும். இந்த ஆரம்பப் பாடசாலையில் இதுதான் உடையென்று வரை விலக்கணம் இல்லை. மேற்சட்டை இல்லாமல் காற்சட்டையோடும் வருவார்கள். காற்சட்டைக்குப் பதிலாக வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டும் வருவார்கள். காற்சட்டை, சரத்தோடு மட்டும் வந்து படித்துவிட்டுச் செல்லும் மாணவர்களும் உண்டு. ஏற்றத்தாழ்வு இல்லாமல் பழகினாலும் படிப்பு விஷயத்தில் மாணவர்களிடையே கடும் போட்டி இருக்கும். குறிப்பாக ஐந்தாம் வகுப்பு இறுதி ஆண்டில் மிகக் கடும் போட்டி இருக்கும்.

ஐந்தாம் வகுப்பு அந்த வருடம் மிகக் கெட்டித்தனமான பிள்ளைகளை போட்டி யாளர்களாக கொண்டு இயங்கிக் கொண்டிருந்தது. நாற்பது பிள்ளை களைக் கொண்ட அந்த வகுப்பில் முதல் ஐந்து கெட்டிக்காரப் பிள்ளைகளுக்கும் இடையில் போட்டியை எல்லா ஆசிரியர்களுமே சேர்ந்து ஊக்கு வித்தார்கள். முதலாம் தவணைப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளிவந்த போது, நாகராசா முதலாம் இடத்தைப் பிடித்துக்கொண்டது ஒருவருக்கும் ஆச்சரியத்தைத் தரவில்லை. அவன் மூன்றாம் நாலாம் வகுப்புகளிலேயே முதலாம் இடத்தை யாருக்கும் விட்டுக்கொடுக்காமல் இறுக்கமாகப் படித்துக்கொண்டே வந்தவன். இரண்டாம் இடத்தை தியாகராசனும் மூன்றாம் இடத்தை செல்வராசனும் நாலாம் இடத்தை குணரத்தினமும் ஐந்தாம் இடத்தைப் பாலச்சந்திரனும் பிடித்துக் கொண்டார்கள். நாகராசன் – சாதாரண கூலித் தொழிலாளியின் மகன். தியாகராசன் – 'இங்கிலிசு' வாத்தியாரின் மகன். மற்றது செல்வராசா 'போஸ்ற்மாஸ்றரின்' மகன். எல்லா வசதிகளும் இருந்தாலும்.... தியாகராச னாலும் செல்வராசனாலும் நாகராசனின் முதலாம் இடத்தைப் பிடிக்கவே முடியவில்லை.

பாடசாலைக்கு வரும்போது நாகராசன் 'சரத்தின்' மேல் ஒரு கிழிந்த சாயம் வெளுத்த 'சேட்' போட்டு வருவான். அது அவனது உடலின் பெரும்பகுதியை மூடி இருக்கும். நிச்சயமாக அது அவனது 'சேட்' அல்ல. அது பற்றி யாரும் கேலி செய்தாலும் நாகராசன் அதைப் பொருட்படுத்துவது இல்லை.

பாடசாலை 'லீவு' நாட்களில் தியாகராசனும்

தொடர்ச்சி 12ம் பக்கம்...


www.tamilarangam.net




தியாகதீபம் திலீபனின் நினைவுடன்
தொப்புள் கொடி உறவுக்காக
30 நாட்கள்



14 - 09 - 97 முதல் 12 - 10 - 97 வரை



**எமதினிய தமிழீழ மக்களே !**

எமது தாயக பூமியிலிருந்து ஆக்கிரமிப்புப் படைகளை அகற்றவும்,தமிழீழ தேசத்தைக் கட்டியெழுப்பவும், எமது மக்களின் துயரங்களைத் துடைத்து எமது இனத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும், எமது செயற்பாட்டாளர்கள் மேற்குறிப்பிட்ட நாட்களில் உங்கள் இல்லங்களுக்கு வருகை தருவார்கள். சென்ற ஆண்டுபோல் தொப்புள் கொடி உறவுக்காக மனமுவந்து உங்கள் உச்சப் பங்களிப்பினை வழங்குங்கள்.

“எம் சொந்தங்களின் துயர்துடைக்க நம் நெஞ்சங்களைத் திறப்போம்”
U.T.O. 202, Long Lane, London SE1 4QB.
☎ 0171 403 4554, 0956 329 660, 0956 314 370


# போரின் அரசியல் ........

வன்னிமைகளில் பனங்காமம், முள்ளியவளை வன்னிமைகள் வன்னி மண்ணின் சுதந்திரத்தை காப்பாற்ற முக்கிய பங்களிப்புச் செய்தன.... கோட்டை இராச்சியமும் யாழ்ப்பாண இராச்சியமும் அன்னியரால் அடிமைப் படுத்தப்பட்ட பின்னரும் வன்னி இராச்சியங்கள் சுதந்திரமாக இயங்கின... வன்னி நாட்டின் இறுதி மன்னனான குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன் ஆட்சி புரிந்த இடம் அனேகமாக மேற்பற்று, முள்ளியவளை வன்னிமைகளாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது. 1803ஆம் ஆண்டு 31ஆம் திகதி கப்டன் வெண்றிபேர்க் கற்சிலைமடுவில் பண்டார வன்னியனை தோற்கடித்தான். ஏறத்தாழ 190 ஆண்டுகளின் பின், இப்போது, கற்சிலை மடுவில் எதிரியின் எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கின்றன. விழுந்துபட்ட தமிழன் வரலாற்றினை எழுந்துபடச் செய்ய தலைவனதும் போராளிகளினதும் பாதங்கள் இங்கே பதிகின்றன. எப்படிப்பட்ட அபூர்வ வரலாற்றுப் பொருத்தமிது. எனவேதான் உறுதியாகச் சொல்கிறோம். காலக் கணக்கு இது. தமிழரின் போரின் அரசியல் இது. “பண்டாரவன்னியன் வீழ்ந்து பட்டான்” என்கிற நடுகல்லுக்கருகே “சிங்களப்படை இங்கே வீழ்ந்துபட்டது” என்கிற நடுகல் நாட்டப்படும். ஏனெனில், புயலென, காட்டாற்று வெள்ளமெனச் சீறிப் பாயும் சிறப்புக் கரந்தடிப்படையான புலிகள், திடீரென தோற்றம் மாற்றி கனரக ஆயுதங்களை கனகச்சிதமாகப் பயன்படுத்தும் மரபுவழிப் படையணியாக மாறிவிடும் இரட்டைப் பரிமாணம் கொண்டவர்கள் அல்லவா? நவீன அறிவியல் உலகையே பெரும் அதிசயத்துள் ஆழ்த்தியிருக்கும் சின்னஞ்சிறு சிலந்தியின் வலைப்பின்னல் போல, வன்னியிலே அவர்கள் பின்னுவது காப்பு வலைப்பின்னல் அல்லவா? ஆப்பிழுத்த குரங்கின் கதை மிகப் பழைய நீதிக் கதை, இப்போது மீண்டும் இம்மண்ணில் அக்கதை புதிப்பிக்கப் படுகிறது.

இறுதியாக போரின் அரசியல் பற்றி சிங்களவருக்கு புத்தர் கூறிச் சென்றது—இது தம்மபதத்தின் 18வது அத்தியாயத்தில் உள்ளது—

**''போர்வெறி கொண்டவர்கள் தங்கள் வேரைத் தாங்களே அகழ்ந்தெடுக்கின்றனர்”**

# மூலதனம்......

## (சிறுகதை)

மற்றப் பிள்ளைகளும் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது நாகராசன் பின்பக்கம் கிழிந்த காற்சட்டை அணிந்துகொண்டு தலையில் எருக்கடகம் சுமந்துகொண்டு தந்தைக்குப் பின்னால் போவான். தந்தையுடனோ தாயுடனோ சேர்ந்து தோட்டத்துக்கு கூலி வேலைக்குப் போனால் நாகராசனுக்கும் காற்சம்பளம் போட்டுக் கொடுப்பார்கள். எல்லோரும் உழைத்தால்தான் குடும்பம் சாப்பிடக் கூடியதாக இருக்கும்.

பாடசாலை ஆரம்பமாகும் மணி ஒலித்தபின் வேர்வை ஒழுக ஓடிவரும் நாகராசனின் கால், கை, நகங்கள் செம்பாட்டு மண் விலகாமல் ஒட்டிக் கொண்டிருக்கும். வகுப்பறையில் நுழைந்துவிட்டால் படிப்பைத் தவிர வேறு சிந்தனை அவனுக்கு இராது.

ஐந்தாம் வகுப்பு இறுதித் தவணைப் பரீட்சையிலும் வழக்கம்போல் நாகராசன் முதலாம் இடம் பிடித்துக் கொண்டான். விடுமுறைக்குப் பின் பள்ளிக்கூடம் மாறி பெரிய பாடசாலைக்குப் படிக்கப் போனபோது நாகராசனின் கோமாளித்தனமான உடையைப் பார்த்து பிள்ளைகள் “கொல்” எனச் சிரித்தார்கள். நாகராசன் குறுகிப் போனான். ஆசிரியர் நாகராசாவைக் கூப்பிட்டு, “உன்னட்டை காற்சட்டை இல்லையே, விடுகாலி மாதிரி 'சரத்தோட' வாராய். வீட்டுக்குப் போய் காற்சட்டை போட்டு வா.” என அவனை அனுப்பி வைத்தார்.

நாகராசன் வீட்டில் பெரும் போராட்டம் செய்தான். காற்சட்டை இல்லாமல் பாடசாலை போகமாட்டன் என அடம் பிடித்தான்.

காற்சட்டை வாங்க பத்து ரூபாவுக்கு எங்கை போறதென தகப்பன் கையை விரித்தார்.

நாகராசன் தொடர்ந்து மண்ணில் புரண்டு அழுதான். கோபம் கொண்டு தகப்பன்,

“உனக்கேன்ரா படிப்பு—மாடு மேய்க்கவும் சாணம் அள்ளவும் ஏன்ரா படிப்பு” எனக் கேட்டு நாகராசனின் முதுகில் தடியால் கோடுகள் வரைந்தார். நாகராசனின் படிப்பு நின்றது. அவன் தந்தைக்குப் பின்னால் கடகம் சுமந்தபடி நடக்கத் தொடங்கினான்.

அந்த ஆண்டு ஆறாம் வகுப்பின் முதலாம் பிள்ளை தியாகராசன், இரண்டாம்பிள்ளை செல்வராசன்.

யோசனையில் இருந்து விடுபட்ட 'டொக்டர்' தியாகராசன் தலையைச் சிலிர்த்துக் கொண்டார். அன்று ஒரு காற்சட்டை மூலதனமாகக் கிடைத்திருந்தால் அந்த நாகராசன் 'டொக்டராகவோ' — அல்லது 'எஞ்சினியராகவோ' இன்றைக்கு இருந்திருப்பான். ஆனால், நாகராசன் மனதில் உள்ள உறுதி — வன்னி மண்ணும் தன் மண்தான் என்ற பிடிப்பும் அவன் நோயுள்ளவனாக இருந்தாலும் இந்த மண்ணின் மைந்தனாகக் காட்டியது. என்ன வசதி இருந்தும் இந்த வன்னி மண்ணைவிட்டுத் தான் அந்நியப்பட்டு விலகி நிற்பது போன்ற ஒரு பிடிப்பற்ற தன்மை “டொக்டரின்” மனதில் ஆழப்பதிந்திருந்தது. ✷

# வவுனிக்குள தேவாலயத்தின் மீது நடாத்தப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதலைக் கண்டித்து அவுஸ்திரேலியாவில் பொதுக்கூட்டம்.

23-08-97 சனிக்கிழமை அன்று அவுஸ்திரேலிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் சிட்னிக் கிளையும், தென்துருவத் தமிழர் சம்மேளனமும் இணைந்து, 15-08-97இல் வவுனிக்குளத்தில் தேவாலயத்தின் மீது சிறிலங்கா அரசாங்கத்தின் விமானப் படையால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலையும், பத்து அப்பாவித்தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமையையும் உலகத்திற்கும், அவுஸ்திரேலிய மக்களுக்கும் தெரியப் படுத்துவதற்காகக் கண்டனப் பொதுக்கூட்டம் ஒன்றை நடாத்தின. இக்கூட்டத்திற்கு திரு. அனா பரராஜசிங்கம் (தென்துருவ தமிழர் சம்மேளன செயலாளர்) தலைமை தாங்கினார். Lowe தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு போல் சமிட், Strathfield மாநகர உறுப்பினர்கள் வேர்ஜினா ஜட்ஜ், அன்ரூ வேறா, வண. பிதா அன்ரூ வில்லியம், வண. பிதா பங்கிராஸ், அருட்திரு. சகோதரி தம்பியம்மா, பத்திரிகையாளர் கிளன் ற்றேனர் ஆகியோர் உரையாற்றினர். பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். திரு. போல் சமிட் அவர்கள் உரையாற்றும் போது சிறீலங்காவில் நடப்பது ஒரு இனப்படுகொலை என்பதை ஒத்துக்கொண்டதுடன், எதிர் வரும் வாரத்தில் பாராளுமன்ற விவாதத்தில் இலங்கை இனப்பிரச்சனை பற்றித்தான் விவாதிப்பதாகக் கூறினார். அத்துடன் இக்கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரும் எமது மக்களிற்கு ஆதரவாக குரல் கொடுத்தார்கள். ✷


கடற்புலிகள் 98

தமிழர் கடற் போரணியைப் பலப்படுத்துவோம்

16.08.97 - 15.12.97

வெளியீடு :
தமிழீழ விடுதலைப் புலிகள், பிரெஞ்சுப் பணியகம்

தமிழர் விடுதலைப் போரின் வெற்றிக்கான பாதை தமிழர் தம் கடற்பரப்பை முழுமையாக தமது கைகளுக்குள் வைத்திருப்பதில் தங்கியுள்ளது. எமது கடலை வெற்றிகொள்ளும் முழுமையான பலத்தை நாம் அடையும்போதுதான் அது எமது பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் சிங்களத் தரைப்படைகளை எம்மிடம் சரணடைய வைக்கும். எதிரியின் அடக்குமுறைக்கான பலம் இதன் மூலம் சிதறடிக்கப்படும். இத்தகைய போர்த்தேவையின் அடிப்படையில் தமிழர் தம் கடற்போரணியான கடற்புலிகளைப் பலப்படுத்த வேண்டும். கடற்புலிகளின்முழுமையான வளர்ச்சியானது, எதிரிப்படைகளை நாம் வெற்றி கொண்டு எம்மண்ணை நாம் மீட்டெடுக்க வழிசமைக்கும்.

இவ் அளப்பரிய போர்ப்பணிக்கு உங்களைக் கூவி அழைக்கின்றோம்

www.tamilarangam.net



# ஐ.நா.நோக்கிய அமைதிப் பேரணி

தேச விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுப்பது, அத் தேசத்தில் வாழும் மக்களுக்கு மட்டுமல்லாது, அத் தேசத்தை விட்டு புலம்பெயர்ந்து பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் வாழும் மக்களினதும் கடமைப்பாடு. இக் கடமையில் இருந்து எந்தவொரு தமிழீழத்தவர்களும் விலகுதல் மனிதாபிமான செயலாகக் கொள்ள முடியாது.

இந்த வகையில், அல்லலுறும் தாயக மக்களை நினைந்து, நிதி உதவி செய்வது மாத்திரமல்லாது தாயக உண்மை நிகழ்வுகளை உலகின் காதிற்குள் உரத்து ஒலிப்பதும் தேச விடுதலைக்கான ஓர் முக்கிய பணி. இதில் பங்கெடுக்கும் ஒவ்வொருவரும் போற்றப்பட வேண்டியவர்கள்.

இதனடிப்படையில், 11.08.97 அன்று சுவிஸ்ட்சலாந்து நாட்டில் நடாத்தப்பட்ட 'ஜெனிவா நோக்கிய அமைதிப் பேரணி'யை எடுத்து நோக்கலாம். தமிழர் பிரதேசத்திலிருந்து சிங்கள ஆக்கிரமிப்பை அகற்றக் கோரியும், தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் இப் பேரணி சுவிஸ் தமிழ்ச் சங்கங்களின் சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

பிற்பகல் ஒரு மணியளவில் இருந்தே ஜெனிவா நகர் பிரதான புகையிரத நிலையம் முன் கூடிய பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள், அங்கிருந்து பிற்பகல் மூன்று மணியளவில் பேரணியாக ஐக்கிய நாடுகள் சபை நோக்கி ஊர்வலமாகச் செல்லத் தொடங்கினர். "புலிகளுக்கு எதிரான போர், தவிர இது தமிழர்களுக்கு எதிரானது அல்ல" என உலகுக்குக் கூறும் சிறிலங்கா அரசின் பித்தலாட்டங்கள் – ஜெனிவா நகரின் வீதியில் வெளிப்படுத்தப்பட்டிக் கொண்டிருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகளும், அதன் தலைமையுமே எமது மக்களுக்கு விடிவைப் பெற்றுத் தரக்கூடியவர்கள், அவர்களே தமிழீழ மக்களின் பிரதிநிதிகள் என்பதை ஊர்வலத்தில் சென்ற மக்கள் ஆணித்தரமாக எடுத்தியம்பினர்.

"எமது தலைவர் பிரபாகரன்", "எமது நாடு தமிழீழம்", "சிங்கள இராணுவமே தமிழீழத்திலிருந்து வெளியேறு", "சர்வதேச சமூகமே எமது போராட்டத்தை அங்கீகரி", என்ற கோசங்கள் மக்களால் மிகப் பலமாக எழுப்பப்பட்டன. பேரணியின் முன்னே தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரன் அவர்களின் பெரியளவிலான உருவப்படம் மற்றும் தமிழீழத் தேசியக்கொடிகள், சிங்களப் படையால் நடாத்தப்படும் மனிதப் படுகொலைகளைச் சித்தரிக்கும் படங்கள் மக்களால் கொண்டு செல்லப்பட்டன. நான்கு மணியளவில் ஐ.நா.சபையின் முன்றலை சென்றடைந்த ஊர்வலத்தின் இறுதியில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதலில் சுவிஸ் பணியக தமிழ் கலைபண்பாட்டுக் கலைஞர்கள், "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" என்ற பாடலைப் பாட அங்கு திரண்டிருந்த பெரும்பாலான மக்களும் அப்பாடலை ஒருமித்துப் பாடினர். தொடர்ந்து உரை நிகழ்த்திய, வன்னியிலிருந்து வருகை தந்திருந்த தென்னிந்திய கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த வண. டானியல் தியாகராஜன் அடிகள் அவர்கள், "எங்கள் மண்ணில் நாம் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ வேண்டும். எம் மண்ணில் நாம் வாழ்வதை ஏன் சிங்கள அரசு தடுக்கவேண்டும். எங்கள் பூமியில் எங்களை அமைதியாக வாழ விடுமாறுதான் சிறிலங்கா அரசிடம் நாம் கேட்கின்றோம்" எனத் தெரிவித்தார்.





ஐ.நாவை நோக்கி தமது உணர்வுகளைச் சுமந்து சென்றுகொண்டிருக்கும் மக்கள் அணி........

"நாங்கள் தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கின்றோம். தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்பங்களை அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். உங்களுடைய முழு உரிமைகளையும் வென்றெடுக்கும்வரை எங்களுடைய ஆதரவு உங்களுக்கு என்றும் இருக்கும்"

– மனித உரிமைகள் சட்டத்தரணி கரன்பாக்கர் அம்மையார்

அடுத்ததாக, அமெரிக்காவைச் சேர்ந்த மனித உரிமைகள் சட்டத்தரணி கரன்பாக்கர் அம்மையார் அவர்கள் உரை நிகழ்த்தினார். "நாங்கள் தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கின்றோம். தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்பங்களை அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். உங்களுடைய முழு உரிமைகளையும் வென்றெடுக்கும்வரை எங்களுடைய ஆதரவு உங்களுக்கு என்றும் இருக்கும்" என்று கூறியிருந்தார்.

அவரைத் தொடர்ந்து, இலங்கையிலிருந்து வருகை தந்திருந்த தேசிய சமாதானச் சபையைச் சேர்ந்த திரு. அஜித் ரூபசிங்க உரை நிகழ்த்தினார். "சந்திரிகா அரசு முன் வைத்துள்ள தீர்வுப் பொதி எந்தவொரு நல்ல தீர்வையும் கொண்டு வரப்போவதில்லை. 'சமாதானத்திற்கான போர்' எனும் பெயரில் தமிழ் மக்களை சிறிலங்கா அரசு அவலத்திற்குள்ளாக்கிறது. இருப்பினம், இன்று, தமிழ்த் தேசிய இனப்போராட்டம் ஒரு புதிய கட்டத்தை அடைந்திருக்கின்றது." எனக் கூறினார்.




விடுதலைப்புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு.முரளிதரன் அவர்கள் உரையாற்றுகையில்.....

சர்வதேச தமிழர் சம்மேளனத்தின் சார்பில் திரு.ஜேம்ஸ் கரன் அவர்களும், தமிழர் மனித உரிமைகள் நடுவகத்தைச் சேர்ந்த செல்வி எலிசா மான், தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் பணியக பிரதிநிதி திரு. நடராஜா முரளிதரன் அவர்களும் உரையாற்றினர். திரு. ந. முரளிதரன் உரையாற்றுகையில், "சீனப் புரட்சியாளர் 'மாவோ' கூறினார் அரசியல் என்பது இரத்தம் சிந்தாத போர், போர் என்பதோ இரத்தம் சிந்தும் அரசியல். எனவே தமிழீழ தளத்திலே இரத்தம் சிந்தப்படுகின்ற அரசியலை எமது போராளிகள் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். புலம் பெயர்ந்த நாடுகளிலே தொடர்ச்சியாக பேரணிகளை, வெகுஜன போராட்டங்களை நடாத்தி இரத்தம் சிந்தாத அரசியலை நாம் செயற்படுத்த வேண்டியது எமது கடமைப்பாடாக இருக்கின்றது. இவற்றின் மூலமாகத் தான் சர்வதேச சமூகங்களின் ஆதரவை எமது போராட்டத்தின்பால் திரட்டிக் கொள்ளலாம்" என்றார்.

இப்பொதுக்கூட்டத்தின் இறுதியில் சுவிஸ் தமிழர் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்றே நீ கூறு" என்ற பாடல் பாடப்பட, மக்களும் சேர்ந்து பாடினர்.

இப்பேரணிக்கு முன்னதாக பத்திரிகையாளர் மாநாடு ஒன்றும் நடாத்தப்பட்டது. இறுதியாக பத்திரிகையாளரின் கேள்விகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. அன்றைய தினம் ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் உபஆணைக்குழுவிடம் மகஜர் ஒன்றும் சுவிஸ் தமிழர் சங்கங்களின் சம்மேளனத்தினால் கையளிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. ✷



ஐ.நா. சபை முன்றலில் கூடியிருக்கும் மக்களின் ஒரு பகுதி.....

www.tamilarangam.net






## நாளை நமதே

அடுப்பில் பொங்கி வழிவதுபோல்
அன்னையின் மனமும் பொங்கி வழிகிறதோ
ஈனப்படையின் இன ஒழிப்பினால் இக்கதி நேர்ந்ததோ
கலங்காதே தாயே
இலக்கியம்கூறும் நல்லதங்காள் இல்லையே நீ
புதுக் காவியம் படைத்திடும் வீரத்தாய் நீ
நாளை துயர் துடைப்பார் எம் காவியத் தலைவன்
துணை நிற்பர் எம் மண்ணின் மைந்தர்கள்.

எம். சீதாதேவி, யேர்மனி.

## பிஞ்சுகளின் வயிறு குளிரும்!

எங்கள் மனைகளில் எதிரி புகுந்தான்!
இங்கோ தங்கிடவோர் குடிலில்லை.
எனினும், தரையே போதும்–
ஆக்கிரமிக்கப்படாத தமிழரின் பூமி.
செவிகளிலே எதிரியின்
ஆணைகள் வந்து கேட்காது.
அடுப்பில் வேகும் கால்வயிற்றுக் கஞ்சிக்கு,
என் பிஞ்சுகளின் வயிறு குளிரும்.

- பரதன்



## துயர் விடியும்

சந்திரிகாவின் பேரினவாத அரசு நடத்தும்
'சமாதானத்திற்கான போரிலே'–எதிரிகட்கு
தலைவணங்காது தலைவர் பாதை தொடர்ந்தீர்
மழையில் நனைந்து வெயிலில் காய்ந்தீர்
தங்குமிடமின்றி பெருந்துயர்பட்டீர்
எனினும் புலிகள் வென்றிடும் நாளை
மகிழ்வுடன் பார்த்திருக்கின்றீர்.

- பருத்திநகர் நித்தி, யேர்மனி.

## பெறாத பிஞ்சுகள்

கீழ்வானம் சிவந்தது
கிழக்கும் வெளுத்தது
நேற்றுச் சென்ற அப்பா இன்னும் வரவில்லை
அடிவயிறோ ஆகாரம் கேட்டு புகையுது
ஆக்கிப்போட அம்மா மட்டும் உண்டு
ஆனாலும் வயிறு குளிர நாட்கள் உண்டு
அகிலம் வாழ் தமிழுறவே
இரங்காயோ மனமுவந்து!

-இணுவை உமா, யேர்மனி.

## தேசம் திரும்புவார்கள்

பாதி வயிறும் நிறையா சமையல்
வீதிக்கு விரட்டப்பட்ட வாழ்க்கை
நாதியற்றுப் போய்விடவில்லை இவர்கள்
நாளை ஊருக்குத் திரும்பலாமென்று
ஒப்பற்ற தலைவனிடமிருந்து செய்தி வரும்.. . .
மீண்டும் தென்றலையெல்லாம் ரசித்தபடி
திரும்புவார்கள் சுதந்திர தேசம்நோக்கி.

- கைலம்மான், பிரான்ஸ்.

## மகிழ்வு இழந்த மழலைகள்

அம்மா உணவுக்கு அழைத்தாலும்
அன்று பசி மறந்து
ஓடிப்பிடித்து விளையாடி மகிழ்ந்தீர்.
இன்று, சொந்த மண்ணில் அகதிகளாய்
பசியோடு உணவிற்காக அம்மா அருகில்
எல்லாம், வெண்புறா வடிவம் நுழைந்து
மகிழ்வைக் கெடுத்ததாலே!

காரை ந. சேகர், இத்தாலி.

## வானமே எம் கூரை

வானமே எங்கள்
கூரையென ஆனாலும்
வான்குண்டு வீழுமெனும்
அச்சம் எமக்கில்லை
அண்ணன்மார் எம்
அருகில் இருப்பதாலே–
பாதையோரச் சமையலால்
அவர் தாகம் தீரும்!

-திருமதி புவனேஸ்வரி, யேர்மனி.

## மலரும் மொட்டுக்கள்

உயிர்களைப் பறித்து
உடமைகளை அழித்து
பொருளாதாரத் தடையெனும்
கொடும்பேயை ஏவினாலும்
நாளை மலரும் சுதந்திரத்துக்காக
அவலங்கள் தாங்கத்
தயங்கமாட்டோம்!

- தனம், பிரான்ஸ்.

## மரநிழலில் நிஜங்கள்

குடியிருந்த கூடுகளில்
கொடிய நாகம் புகுந்ததினால்
அகதியாய் வந்திருந்து
அரைவயிற்றுச் சமையலா?
சிறுவன் உடம்பில் துணியில்லை
மனதில் நிறைந்த துணிவிருக்கு
மண்ணில் சுதந்திரம் துளிர்க்கும்வரை
மக்கள் நாங்கள் துணையிருப்போம்.

-எம். சுகுமாரன், யேர்மனி.

## அவலம் திருமா?

ஏக்கம் நிறைந்த நெஞ்சினிலே
தூக்கம் இன்மை தெரியுதடா
துடிக்கும் இளம் பிஞ்சுகளின்
வயிறு வாடிக் கிடக்குதடா
உடுக்கை இல்லை என்றுகூட
ஏங்கித் தவித்ததில்லையடா
வடிக்கும் சோற்றுக் கஞ்சிக்கு
வாய் உமிழ்ந்து நிற்குதடா.

- ஜெகதீஸ்வரன், யேர்மனி.

## ஆக்கங்கள் அனுப்பிய அனைவரையும் நன்றி கூர்கின்றோம்.

கருணையூர் நந்தி– அவுஸ்திரேலியா, பப்பி–யேர்மனி, அருள்மோகன்–யேர்மனி, பொ.கோபால்.வவி –யேர்மனி, ம.தேவன்ரவி–யேர்மனி, வல்வை–விஜயன், செ. வனிதா–பிரான்ஸ், எஸ். கிளமேன் சொபிதா–பிரான்ஸ், இதயகுமார்–இத்தாலி,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கனவுக்குள் கரையாதே பகையே! நிமிருமெம் தேசம் நெருப்புக் குளிக்கும்

ஜனனம் களிப்புக்குரிய தென்றால்..
மரணம் மட்டும் என்னவாம்
சாதகப் பறவையின் சங்கீதம் போல..
அதுவும் மகிழ்ச்சிக்குரியதே.

எஜமானர்களற்ற இருப்பே இனிமையானது.

அடிமைச் சீவியமே எமக்கானதென்றால்.
ஜனனமும் ஒன்றே.

மரணமும் ஒன்றே.

இது தத்துவமல்ல.. சத்தியம்.

அன்னைமடியேறி வந்துளது அனற்காற்று.

பூமரங்கள் யாவும் பொசுங்க
வீசுகிறது விஷக்காற்று.

துடைத்தழிப்பேனென துள்ளி
நடக்கிறது கூத்து.

உண்மைமுகங்களை உருமறைத்துவிட்டு
கண்களில் கருணைவழிவதாகக் காட்டுகிறது.

உலகெங்கும் ஒய்யார உலா
இங்கே மட்டும் இரணியத் தர்பார்.

பூதகி பால் கொடுக்க வருகின்றாள்.
நப்பாசையில் நம்பிவிடாதீர்.

முலை சுரப்பது பாலல்ல.. விஷம்.

குடியெரித்துக் கொளுத்த
இடிஅமீன் சேலைகட்டி வந்துள்ளான்.

மாமன் வேரோடு மரங்களை விழுத்த
மருமகள் உழுதுவிதைக்க உரம்கொடுக்கிறாளாம்.
வேடிக்கையான சோடிப்பு.

இவர்களுக்குச் சாமரம்வீச இங்கேயும் ஓரிருவர்.

வெள்ளைவான் கொள்ளைக்காரர்கள்

## உலைக்களம்

- வியாசன்

கொழும்புவிட்டு குடாநாடு வந்துள்ளனர்.

ஈரத்துணியோடு இரவில் உலவுகின்றனர்.
சோரம்போன சுந்தரிகள்.

ஓரவிழி காட்டி உள்ளே அழைப்பார்கள்
யாரும் நம்பிவிடாதீர்.

பத்தாயிரம் கல்லறைகளிலெழும் பாடல்களையே
தொடர்ந்து பாடுங்கள்.

மோகினி ஆட்டத்தில் மெய்மறந்துவிட்டால்
தூமணி மாடத்துச் சுடர்விளக்கு
அணைந்துவிடும்.

விசர் பிடித்தலைகின்றன தெருநாய்கள்
கடித்துவிட்டு மருந்து கட்டும்,
கவனம்.

விடுதலையை ஏலம்போட்டு விற்பவர்கள்
மேடையேறி யுள்ளனர்.

குறைந்த விலைக்கு இனிக்கூவி விற்பார்கள்.

உயிர்கொடுத்துப் பெற்ற திருவிளக்கை
இவரழித்துப் போகவோ?

அரையில் உடுப்பும்,
அதற்குள்ளே மறைவுடுப்பும்
வெறும் திரை போட்டு மறைக்கும் விவகாரமல்ல.
இது மானஸ்தன் சூடுகின்ற மகுடம்.
எச்சிலிலைக் காகங்களுக்கு.. கச்சையெதற்கு?

வில்லேந்திய வீரக்குலத்தின் அடிமனதின்
உள்ளூறும் உணர்வின் ஊற்றடைத்துப்
போமென்று
சொன்னது யார்?

சுரந்தூறும் எங்கள் மணற்கேணி.

விடுதலை:
இது எம் சுவாசக் குழலின் சுடுமூச்சு.
சுதந்திரம்:
இதயத் துடிப்பொவ்வொன்றும் பாடும்
எக்காளப்பாடல்.

எமக்கில்லை யாயினும்
தலைமுறையெனினும் தலை நிமிரட்டும்.

அதற்கானதே எம் அணிவகுப்பு.

நிலவுலவும் வானத்தின்மீதும்,
நிமிர்ந்துள நெடிய பனைகளின்மீதும்,
தமிழனென்றெமை ஈன்ற தாயவள் மீதும்,
சத்திய மொன்றுரைத்தோம்.

சாலையோரத்துப் பாலை மரங்களே!
முற்றித் திரண்ட முதிரை மரங்களே!
உறுதியொன்றெடுத்தோம் உம்மீது.

தளராதெம் படையணி.

பகைவரும் வழியெங்கும் புதைகுழி வெட்டி
புல்லின் வடிவிலும் புலிவீரரிருப்பாரென்பதை
இனிவரும் நாட்களில் எதிரிக்குணர்த்துவோம்.

வதை சுமந்து சலிப்புற்றது எம்மண்
காட்டுவாசிகளாயினர் எம்மக்கள்.

அழகொருகாலம் அடைக்கலமிருந்த
முகங்களெல்லாம்
ஒட்டியுலர்ந்து உருமாறிவிட்டன.

கற்கால மனிதர்களைப்போல.. காட்சிப்பொருளாய்
வீதியோரங்களிலெல்லாம்
இன்றைய பொழுதுக்குத் தூங்கி
நாளைய நாட்களுக்கு ஏங்கி
தொல்குடியொன்றின் தொப்புள்கொடி
துண்டாடப் பட்டுத் துடிக்கிறது.

இத்தோடாவது விட்டானா இடிவிழுவான்

குடிமனைகளுக்குள்ளே எறிகணை அதிரும்போது
கருவறைகளே கலங்கிப் போகின்றன.

நட்சத்திரங்கள் கூட நடுங்குகின்றன.

மேகங்களுக்கு மூச்சுத் திணறுகின்றது.

நிலவு நெருப்புக் குளிக்கிறது.

வழியெங்கும் அமிலதாரை வழிகிறது.

ஊரெல்லாம் சாக்குருவியின் ஒப்பாரி.
பிணச்சோறுண்ணும் பிசாசுக்கு



இதுவும் போதாதாம்.

சென்றுவரத் தெருவொன்று தேவையாம்.
கொன்று குவித்துக் கூழ் காய்ச்சும் ஆசையில்
கண்டிவீதியிலும் கால்பதித்துள்ளது.

காற்றற்றுப் போனாலும்
நாங்கள் மூச்சுவிடும் ஜாதியென்பதை
வரும் பகைக்குணர்த்தும் தருணமிது.

இளைய தலைமுறையே!
விழியில் நெருப்பேந்தி வீதியில் இறங்குக.

முரசு முழங்கட்டும்.
புனிதப் போருக்கு புதுரத்தம் பாய்ச்சுவோம்.

பலமிழந்துன் பாதம் பணிவோமெனும்
கனவுக்குள் கரையாதே பகையே!

நிமிருமெம் தேசம் நெருப்புக் குளிக்கும்.
ஆயிரமாயிரம் அக்கினிக் குஞ்சுகள்
அவதரிக்கும்.

கொற்றவைத் தேவி! நின் கோயில் வந்தோம்.

அற்புதம் நிகழ்த்த ஆசிகொடு தாயே!

வீரத் தேவி!
நீயே தமிழரின் காவற் தேவி.

ஆயிரம் கைகள் வீசி வீதியிலிறங்கி
அம்மையே! எங்கள் வெம்மை தணிவிப்பாய்.

சங்கெங்கே–
எடடா.... ஊது.. ..
பகை யெங்கே?
வாடா.. காட்டு..
"வெற்றி உறுதி" யா?
யாருக்கு?

www.tamilarangam.net





# தமிழீழப் பெண்ணிவள்!

இவள் நெற்றிதனை அலங்கரிப்பது
குங்குமம் அல்ல செங்குருதி ।
இவள் கண்களில் தெரிவதெல்லாம்
இளமையின் இனிமைகள் அல்ல
இறந்தவர்களின் கல்லறைகள் ।
இவள் உதடுகள் உச்சரிப்பது
உபயோகமற்ற உளறல்களையல்ல
உதிர்ந்தவர்களின் உறுதிமொழிகளை।
இவள் கழுத்தில் கிடப்பது
தாலியல்ல சயனைற்குப்பி ।
இவள் அணைத்துக் கொள்வது
ஆண்களையல்ல ஆயுதத்தை ।
இவள் கால்கள் தேடிப்போவது
உறவினரின் உறவைத்தேடியல்ல ,
தமிழீழ மண்ணின் விடுதலையை நோக்கி
இவள் துப்பாக்கி
தீர்க்கும் வேட்டுக்கள்
தப்பாது எதிரியை வீழ்த்தும் ।
தமிழீழ விலங்கை ஒடிக்கும் ।।
அப்போது எம்மக்களின் உதடுகள்
தேசிய கீதத்தை இசைக்கும்।।।

- கப்டன் வானதி

## ஐ.நா. நோக்கிய அமைதிப் பேரணி....



11.08.97 அன்று சுவிசில் நடைபெற்ற ஐ.நா.நோக்கிய அமைதிப்பேரணியில் பங்கெடுத்த தமிழ் மக்களின் ஒரு பகுதியையும், தமிழீழக்கொடியேற்றல் நிகழ்வையும் படத்தில் காணலாம்.....

